"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 2016

அன்னம் அளித்திடுவோம் அவர்பசியைத் துடைத்திடுவோம்
என்றுசொலிப் பாற்பொங்கல் ஏருழவர் பொங்குகிறார்



## பொங்கல் புதுவருட வாழ்த்து 2016

80 ஆவது இதழ்

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 24

# கலசம்
KALASAM

ஒலி 80

www.saivamunnettasangam.com

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்
சி தம்பு

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## புனிதம் காப்போம்

2016 ஜனவரி முதலாந்திகதி முதல் தமிழ்நாட்டுக் கோயில்களுள், 'ஜீன்ஸ்', காலோடு ஒட்டிய ஆடைகள், அரைக்காற்சட்டை, பாதி உடல்தெரியும் ஆடைகள் போன்றவற்றை அணிந்து ஆண்களோ, பெண்களோ, சிறுவரோ செல்லக்கூடாது என்று நீதிபதி ஒருவர் ஆணை பிறப்பித்துள்ளார். இந்த ஆணையைப் பலர் ஏற்றிருந்தாலும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஒடுக்குமுறை, சுதந்திரத்தை மீறும் ஒருசெயல் இதுவென்று சிலர் கருதுகின்றனர். இந்த உத்தரவு தமிழ்நாடு அரசு எல்லைக்கு உட்பட்ட கோயில்களில் மட்டுமே செல்லுபடியாகும் அன்றி, புதுச்சேரியில் அது செல்லுபடியாகாது என்று சிலர் சொல்கின்றனர். புதுச்சேரி தமிழ்நாடு நீதித்துறைக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காது என்பது காரணம். அத்துடன் தனி ஒரு நீதிபதி எப்படி இதை வரையறுக்கலாம், ஒரு குழுவாக நீதிபதிகள் இருந்து பரிந்துரை செய்யவேண்டாமா? என்பது இன்னொரு சிலரின் கருத்து. ஈழநாட்டிலும் பலர் பலவிதமாக உடையணிந்து கோயிலுக்குச் செல்வதை அண்மையிற் பார்க்க முடிந்தது.

மேற்குநாட்டவர் ஒவ்வொரு விழாவுக்கும் எப்படி உடையணிந்து வரவேண்டும் என்பதில் கட்டுப்பாடாக இருப்பார்கள். திருமணம், மதசார்பான விழா, மரணச்சடங்கு என ஒவ்வொன்றுக்கும் ஆடை அணிவதில் அவர்கள் அதிக கவனம் செலுத்துவார்கள். சில களியாட்ட விடுதிகளிலேகூடச் சில ஆடை களை அவர்கள் அநுமதிப்பதில்லை. சரியான உடையோடு வராதவர்களை உள்ளே விடுவதுமில்லை.

ஒரு கோயிலிலே திருவிளக்கு வழிபாடு நடந்தது. அதிலே கலந்துகொள்ள வந்த பெண் ஒருவர், தலைமுடியை விரித்தபடியே வந்து கலந்துகொண்டார். பக்கத்திலிருந்த விளக்கில் அவர் தலைமுடி பட்டு, பாதி எரிந்துவிட்டது. தலையை முடிந்து கட்டுவது ஒடுக்குமுறை அல்லது நாகரிகத்துக்குப் புறம்பானது என்று அவர் முடியாது விட்டிருக்கலாம். அன்று உயிர்தப்பியது அவருடைய அதிட்டமே!

கோயில் என்பது களியாட்டத்துக்கான; நாகரிக உடையணிந்து போகும் பொழுதுபோக்கு இடமன்று. அது புனிதமான வழிபாட்டுக்குரிய இடம். அந்தப் புனிதத்தைக் காக்கவேண்டியது நம்முடைய கடமை. கடைகள், களியாட்ட இடங்கள், கடற்கரைகள் போன்ற இடங்களுக்குப் போவதுபோல நாம் கோயிலுக்குப் போவதில்லை; போகக்கூடாது. கோயிலுக்குப் போகும்போது பொருத்தமான உடையணிந்து பத்தியுடன் போய் வழிபடவேண்டியதுதான் முறை. அதை விடுத்து, சுதந்திரம் பற்றிப் பேசுவதும், அரசியல்வாதிகள், நீதிபதிகள், பகுத்தறிவாளர்கள் கருத்துக்களை இந்த விடயத்தில் எதிர்பார்ப்பதும் வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

*க ஜெகதீஸ்வரன்*
ஆசிரியர்

# இந்த இதழில்


| | |
|---|---|
| சீவன் முக்தர்கள் | 03 |
| அப்பர் தந்த அட்டவணை | 07 |
| மஹாராஷ்டிரா எல்லோரா பயணக்கட்டுரை | 10 |
| நான் | 14 |
| பொங்கலோ பொங்கல் - பொங்கற்கவிதை | 15 |
| இறைவன் திருவிளையாட்டில் இராவணன் | 17 |
| தேவாரம் - உண்மைப் பொருள் | 20 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 29 |
| சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி | 30 |
| Thirukkural in praise of God | 32 |
| ஆன்மா | 36 |
| சைவ சமயம் | 38 |
| கோச்செங்கட்சோழ நாயனார் | 39 |
| கண்ணனும் தாத்தாவும் | 41 |
| Hinduism in search of answers | 45 |


**அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்**

# சீவன் முக்தர்கள்

## வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

**ஆர் இந்தச் சீவன் முக்தர்கள்?**
நாவுக்கரசரின் தேவாரம் ஒன்று சைவசித்தாந்தத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அது நமச்சிவாயத் திருப்பதிகத்தில் உள்ளது. 4267ஆம் தேவாரம் அது. இதுதான் அந்தத் தேவாரம்.

"சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமிலன் நாடொறும் நல்குவான் அலன்
குலமில ராயினும் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"

"சிவபெருமான் விருப்பு வெறுப்பு அற்றவன். அப்படியானவன் சார்ந்தவர்க்கல்லால் நலமிலன்" என்று நாவுக்கரசர் தம்முடைய தோத்திரத்தில் பாடுகிறார். இந்தத் தோத்திரங்களின் சாறு எனப்படுகின்ற பதினான்கு சாத்திரங்களில் ஒன்றான திருவருட்பயனில் வருகின்ற ஒரு குறள் நாவுக்கரசரின் இந்தக் கருத்தைப் பிரதிபலிப்பதுபோலத் தெரிகிறது. இதுதான் அந்தத் திருவருட்பயன் குறள்:-

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்"

இறைவன் நம்மிடம் வரக் காத்திருக்கிறான் என்பது உண்மைதான். ஆனால் நாம் அவனை நோக்கி நண்ணவேண்டும். அவன் மேலிருந்துகொண்டு கீழே நீட்டுகின்ற கையை எட்டிப் பிடிக்க வேண்டும். எட்டிப் பிடிப்பது என்றால் என்ன? கோயிலுக்குப் போவதா? அர்ச்சனை செய்வதா? திருவிழாச் செய்வதா? அங்கப் பிரதட்சணம் செய்வதா?. கந்தசஷ்டி பிடிப்பதா? அல்லது வேறு விரதங்களை அநுட்டிப்பதா? திருவாரூரிற் பிறப்பதா? காசியில் இறப்பதா? இவற்றுக்கு விடை காணவேண்டும்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

என்றான் வள்ளுவன். நமக்குப் புறத்தூய்மையும் வேண்டும்; அகத்தூய்மையும் வேண்டும்.

அகத்தூய்மையுடைமை வாய்மையாற் காணப்படும் என்கிறான் வள்ளுவன்.
வாய்மை என்ற சொல்லுக்கு மட்டுப்பட்ட கருத்தைச் சொல்லிவிடுவோமோ என்று அஞ்சிய வள்ளுவன் அதற்கும் ஒரு வரைவிலக்கணம் கூறிவைத்திருக்கிறான்:

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

இந்தக் குறளையும் தவறாக அர்த்தப்படுத்திவிடுவோமோ என்று அஞ்சிய வள்ளுவன், வாய்மை என்றாலும் பொய்யாமை என்றாலும் ஒன்றுதான் என்று விளக்கவேண்டி....

**"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று"**

என்று சொல்கிறான். பொய்யாமை என்ற வாய்மைதான் மிகச்சிறந்த அறம் என்றும், வாய்மையை மேற்கொண்டால் வேறு அறங்களைச் செய்யவேண்டியதில்லை என்றும் சொல்கிறான் வள்ளுவன். இந்தப் பொய்யாமைப் பண்பை வலியுறுத்த வந்த வள்ளுவன், கொல்லாமையை வலியுறுத்த வந்த இடத்திலும் பொய்யாமையைப் போற்றத் தவறவில்லை என்பதை...

**"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று"**

என்ற குறளிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

அப்படியானால் 'அறம்' என்றால் என்ன? அறம் என்பதை வள்ளுவர் பல இடங்களில் விரித்து விளக்கியிருக்கிறார். அந்த விளக்கம் சில இடங்களில், சிலருக்குச் சில மயக்கங்களைத் தரலாம். ஆனால் அவற்றையெல்லாம் தொகுத்து நோக்கினால் அவற்றுக்கிடையே, அந்த விளக்கங்களை எல்லாம் தொடுக்கின்ற இழை ஒன்று ஓடுவதை அவதானிக்கலாம். அறத்துப்பாலில் உள்ள முப்பத்தெட்டு அதிகாரங்களிலும் உள்ள குறள்களை நுனித்து நோக்கினால் இந்த உண்மை புரியும். **'அறன் வலியுறுத்தல்'** என்ற ஒரு தனி அதிகாரமே உண்டு.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**

என்பது 35ஆவது குறள்.

பொறாமை, பேராசை, கோபம், சுடுசொல் என்பன ஒருவனிடமிருந்து நீங்கினால், அவன் தெய்வமாவதற்கான பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டான் என்பது பொருள். இந்த நிலைக்கு **மெய் உணர்தல்** என்று பெயர். திருக்குறளில் **மெய் உணர்தல்** என்று ஓர் அதிகாரமே உண்டு. இது 36ஆவது அதிகாரமாக அமைந்திருக்கிறது. சைவசித்தாந்தம் படிக்கிறவர்கள் **'மெய்யுணர்தல்'** என்ற இந்த அதிகாரத்தைக் கட்டாயம் படித்தல் வேண்டும். **'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்'** என்ற குறளுக்கான விரிவான விளக்கங்கள் சில **மெய்யுணர்தல்** என்ற அதிகாரத்திலே காணப்படுகின்றன. **'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்.'** என்பது 360ஆவது குறள். இந்தக் குறளுக்கு உரை எழுத வந்த பரிமேலழகர்-
*"ஞான யோகங்களில் முதிர்ச்சி உடையாருக்கு விழைவு, வெறுப்பு, அவிச்சை என்னும் இவை மூன்றனுடைய பெயருங்கூடக் கெடுதலான், அவற்றின் காரியமாய வினைப் பயன்கள் உளவாகா. அவிச்சையும் அதுபற்றி "யான்" என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி "எனக்கு இது வேண்டும்" என்னும் அவாவும் அதுபற்றி அப்பொருள்கள் மீது செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் இலலாமற்போனால், வினைப்பயன்கள் உண்டாகா"* என்று எழுதுகிறார்.

அதே அதிகாரத்தில் உள்ள மற்றொரு குறளில்-

**“அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்**
**அற்றாக அற்றது இலர்”**

என்கிறார்.

இந்தக் குறளை இன்னும் விரிக்குமாப்போல், 370ஆவது குறளில்

**“ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்”**

என்று சொல்கிறார்.

பேராஇயற்கை என்பது வீடுபேறு. இதையே .திருமூலரும்

**“ஆசை அறுமின் ஆசை அறுமின்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்”**

என்றார். நான் தொடக்கத்திலே கூறிய **‘நண்ணினர்க்கு நல்லன்’** என்ற தொடரில் வருகின்ற நண்ணுதல் என்பது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவற்றை அகற்றுதல்தான்.

பிரான்ஸ் நாட்டிலுள்ள ‘லூர்து’ மாதாகோயிலுக்குப் போனபோது அங்கே ஒரு சிலையைக் கண்டேன். அந்தச் சிலையில் இறைவன் மேலிருந்து தனது கையைக் கீழே முனைந்து நீட்டிக் கொண்டிருக்கிறான். கீழே உள்ள மனிதன் இறைவன் நீட்டிய கைக்கு அண்மையில் நிற்கிறான். ஆனால் நீட்டிய கையைத் தன் கையால் தொட்டுப் பிடிக்காமல் நிற்கிறான் மனிதன். அழுக்காறு, அவா. வெகுளி, இன்னாச்சொல் என்ற சுமைகளால் வாடுகின்றமையால், நீளும் கரத்தை எட்டிப்பிடிக்க விரும்பாமல் அழுக்காற்றிலும், அவாவிலும், கோபத்திலும், கொடுஞ்சொல் சொல்வதிலும் ஆசைப்பட்டு நிற்கிறான் மனிதன். ‘யான்’, ‘எனது’ என்னும் அழுக்கை அறுத்தால் வானோர்க்குயர்ந்த வையத்தைப் பெறலாம் என்று வள்ளுவர் கூறியும் “நான்”, “எனது”, “எனக்கு” என்று அழுக்காறும் அவாவும் கொண்டு கோபித்துப் பேசிக்கொண்டிருக்கிறான் மனிதன்.

ஆணவத்திற்கு மூலமலம் என்பது பெயர். ஆன்மாவோடும், பின்னர் உயிரோடும் என்றுமே ஒட்டிக்கொண்டிருக்கும் மலம் என்பதால் அதற்கு மூலமலம் என்று பெயர். அது வலி குன்றுமேயொழிய, என்றுமே ஒழியாது. இந்த மூலமலத்தையும் கன்ம மலத்தையும் இல்லாமற் செய்வதற்காகவே இறைவன் தனு, கரண, புவன போகங்களைப் பந்திக்கப்பட்ட உயிர்களுக்காகப் படைக்கிறான். மாயையிலிருந்து தோன்றிய இந்த உடலையும், கரணங்களையும், உலகத்தையும், பயன்படுத்தி ஆணவத்தின் வலியைக் குறைத்து பிராரப்தத்தை அநுபவித்து, ஆகாமியத்தை அநுபவிக்காமல், சஞ்சிதத்தைக் குறைத்துத் தொலைத்துத் தாடலைபோற் கூடிய நிலையை அடைய வேண்டிய உயிர், ஆசை என்ற வலையுட்பட்டு, ஆணவத்துக்கு வலுக்கூட்டி ஆகாமியங்களை உழைத்துச் சஞ்சிதத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது.

இது நிகழாமல் தடுக்க வேண்டும் என்றால், யோகப்பயிற்சியாலும், ஞானப்பயிற்சியாலும் நாம் மேலே குறிப்பிட்ட ஆசாபாசங்களையும் அவற்றால் விளைகின்ற அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவற்றையும் அறுக்க வேண்டும். இந்த **“அறுப்பு”** முயற்சியில் ஈடுபடும்போது,

ஆணவத்தின் வலிமை குன்றத் தொடங்கும். இவ்வாறு ஆணவத்தின் வலியானது குன்றுகின்ற நிலைக்கு மலபரிபாகம் என்பது பெயர். இங்கே மலம் என்பது மூலமலமாகிய ஆணவம். மூலமலத்தின் பலம் குன்றக்குன்ற, நான், எனது, எனக்கு என்ற அகந்தை கட்டழியும். கட்டழியத் தொடங்குகின்ற நிலையில், மமதைக்கே உரியதாக இருந்த அன்பு என்ற பண்பு அருளாக மாறும். அதாவது நானற்ற கருணையாக மாறும். இந்த நிலையில் உயிர்கள் செய்கின்ற எச்செயலும் இச்சைப்படாத செயலாக, நிஷ்காமியச் செயலாக, பயன் கருதாத செயலாக இருக்கும்.

அதாவது பருவரல், இன்பம் என்ற இரண்டையும் ஒக்க நோக்குகின்ற யோகச்செயலாக இருக்கும். மண்ணையும், பொன்னையும் ஒன்றாகவே நினைக்கின்ற நிலையாக இருக்கும். இதைத்தான் "இருவினை ஒப்பு" என்கிறார்கள். நோயுற்றால் கவலாமலும், பேறுற்றால் மகிழாமலும் இருக்கின்ற நிலையில் உள்ளவர்கள் செய்யும் நிஷ்காமியச் செயல்களால் ஆகாமியம் விளைவதில்லை. இந்த இருவினை ஒப்புநிலை பற்றி மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார்.-

**"பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன் நாமங்கள் பேசுவார்க்கு**
**இணக்கிலாததோர் இன்பமே வரும் துன்பமே துடைத்தெம்பெருமான்**
**உனக்கிலாததோர் வித்து மேல் விளையாமல் என்வினை ஒத்தபின்**
**கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே"**

இவ்வாறு நிஷ்காமியச் செயல்களைச் செய்து கொண்டு வாழ்கின்றவர்களையே சீவன் முக்தர்கள் என்பர். இவர்களின் ஆணவம் வலியொடுங்கி வாழ்விழந்து நிற்கும். மாயையின் விளைவுகளான உடலாலும் கரணத்தாலும், புவனத்தாலும், போகவாய்ப்புக்களாலும் அவர்கள் பாதிக்கப் படுவதில்லை. ஆனால் ஏனோ தானோ என்று செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் உடலை நீங்காமல் இருப்பதற்குக் காரணம் உண்டு.

**"வினைதான் ஒழிந்தால், தினையளவும் நில்லாது உயிர்"** என்பது சைவசித்தாந்தம். பிறப்பெடுத்தபோது இந்த உயிர்களின் இந்தப் பிறவிக்கென்று அளந்து கொடுக்கப்பட்ட நல்வினை தீவினை என்ற பிராரப்தத்தை அநுபவித்து முடிக்கின்ற வரைக்கும் இந்தச் சீவன் முக்தர்களின் உடல் இந்த உலகில் அழியாமல் இருக்கும். அநுபவித்து முடித்ததும் உயிர் பிரிந்து போகும். சம்பந்தப்பட்ட சீவன்முக்த உயிர், முன்னைய பிறவியிற் சேர்த்துவைத்த சஞ்சிதத்தை அநுபவித்துத் தீர்க்கின்ற வரைக்கும் சீவன்முக்த உயிர்களும் பிறப்பெடுக்கும். திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் போன்ற அருட்செல்வர்களை அத்தகைய சீவன்முக்தர்களாகக் கொள்ளலாம். தனக்கென முயலாமல் பிறர்க்குரியராக வாழ்பவர்களே சீவன் முக்தர்கள். யோகர்சுவாமி, சீரடி பாபா போன்ற சித்தர்களை அந்த வரிசையில் சேர்க்கலாம்.



# அப்பர் சுவாமிகள் தந்த அட்டவணை

ச வேதநாராயணன்

பெருங்கோயில் என்றவுடன் தஞ்சைப் பெரியகோயில்தான் நம் மனக்கண்முன் தோன்றும். ஆனால் அதற்கு முன்பே எழுபத்தெட்டுப் பெருங்கோயில்கள் இருந்தன என்பது நம்மிலே பலர் அறியாத தகவல். அந்தத் தகவலை நமக்குத் தந்திருப்பவர் அப்பர் சுவாமிகள்.

திருவையாற்றிலே சிவனின் கயிலைக் காட்சியைக் கண்டு களித்த அப்பரடிகள், அதன் பின் திருநெய்த்தானம், திருமழபாடி ஆகிய தலங்களைத் தரிசித்து, திருப்பூந்துருத்தியை அடைந்தார். அங்கு திருத்தொண்டு செய்துகொண்டிருக்கும் நாள்களில் அவர் பல பதிகங்களை அருளினார். அதனில் ஒன்றுதான் இந்த அடைவுத் திருத்தாண்டகம். ஆறாந்திருமுறையில் எழுபத்தொராவது பதிகம். கோயில்களின் வகைகளை வகைப்படுத்தி அட்டவணையாகப் பாடியதால் இது அடைவுத் திருத்தாண்டகம் எனப் பெயர்பெற்றது. அடைவு - முறை, முறைப்படுத்தியது.

இப்பதிகத்திலே 'பள்ளி' (திருக்காட்டுப்பள்ளி), 'வீரட்டானம்'(அதிகை வீரட்டானம்), 'குடி' (விற்குடி), 'ஊர்' (நாரையூர்), 'காடு' (திருவாலங்காடு), 'வாயில்' (புனவாயில்), 'ஈச்சரம்' (இராமேச்சரம்), 'குன்றம்' (கழுக்குன்றம்), 'ஆறு' (தெள்ளாறு), 'களம்' (நெடுங்களம்), 'கா' (நெல்லிக்கா), 'துறை' (மயிலாடுதுறை) என எல்லாவகைக் கோயில்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பதிகத்தின் ஐந்தாவது தேவாரம்,

**பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினொ டெட்டும் மற்றும்**
**கரக்கோயில் கடிபொழிலசூழ் ஞாழற் கோயில்**
**கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்**
**திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே**

*06-71-05*

மேலுள்ள தேவாரத்திலே பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் ஆகிய தலங்கள் அடங்கும்.

பெருங்கோயில் என்று திருமுறைகளிலே குறிக்கப்படுபவை, பெண்ணாகடம் (1-59), பூந்தராய் (3-260), புகலி (3-261), நல்லூர் (4-97), தலைச்சங்கை (6-51), அம்பர் (6-87), கலயநல்லூர் (7-16), கோளிலி (7-62), நன்னிலம் (7-98) ஆகியவை. அடைப்புக்குறிக்குள் உள்ள முதலாவது எண் திருமுறை எண், இரண்டாவது எண் பதிக எண்.

கரக்கோயில் என்பது மேலக்கடம்பூர் தலமாகும். ஞாழற்கோயில் திருப்பாதிரிப்புலியூர். இந்த ஊருக்கு ஞாழலூர் என்று பெயரிருந்தது. காவிரியின் தென்கரைத் தலமான 40ஆவது தலம்

விளநகர் கோயில் என்று திருமுறைத் தலங்கள் (பு மா ஜயசெந்தில்நாதன்) என்ற நூல் தெரிவிக்கிறது. திருகொகுடிக்கோயில் கருப்பறியலூர் (மேலைக்காழி) ஆகும். இளங்கோயில் மீயச்சூர் இளங்கோயில். மணிக்கோயில் - கோட்டூர் மணியம்பலம். ஆலக்கோயில் சென்னைக்கு அருகிலுள்ள திருக்கச்சூர் ஆலயத்தைக் குறிக்கிறது.

**பெருங்கோயில்:**
பெண்ணாகடம் நடுநாட்டில் இரண்டாம் தலம். அப்பர் பெருமானுக்குச் சிவச்சின்னம் பொறித்த தலம். சந்தானகுரவரான மெய்கண்டார் அவதரித்த தலம். இந்தத் தலத்துக்குத் தூங்கானைமாடம் என்ற பெயரும் உண்டு.

பூந்தராய், புகலி ஆகியவை சீகாழிக்குரிய பெயர்கள் பன்னிரண்டில் இரண்டு. திரு ஞானசம்பந்தரைத் திருமுலைப்பால் கொடுத்து ஆட்கொண்ட தலம்.

நல்லூர் காவிரியின் தென்கரையில் உள்ள இருபதாவது தலம். இது மாடக்கோயில். அப்பருக்குத் திருவடிதீட்சை அளித்த தலம். இக்கோயிலின் மூலவர் பஞ்சவர்ணேசுவரர். தினமும் மூலவரின் நிறம் ஐந்து முறை மாறுகின்றது. பத்தர்களுக்குச் சடாரி சாத்தும் வழக்கம் சிவன்கோயில்களுள் இங்கு மட்டுந்தான் இருக்கிறது.
தலைச்சங்காடு காவிரியின் தென்கரையிலே உள்ள 45ஆவது தலம். இதுவும் மாடக்கோயில். இறைவன் பெயர் சங்காரண்யேஸ்வரர். ஆக்கூர் தான்தோன்றிமாடக் கோயிலுக்கு அருகில் உள்ளது.

காவிரியின் தென்கரையில் 54ஆவது கோயில் அம்பர் பெருங்கோயில். கோச்செங்கட்சோழன் கட்டிய கோயில்களுள், கடைசியாக அமைந்த மாடக்கோயில். சோமாசிமாறர் வசித்த தலம். இக்கோயில் திருவாரூருக்கு அண்மையில் உள்ளது.


கலயநல்லூர் காவிரியின் தென்கரையிலுள்ள 68ஆவது தலம். கும்பகோணத்துக்கு அருகில் உள்ளது. இப்போது இவ்வூர் சாக்கோட்டை என அழைக்கப்படுகிறது. இராசராசன் காலத்துக்கு முன்பே கற்கோயிலாகக் கட்டப்பட்டு.

கோளிலி 123ஆவது தலமாகக் காவிரியின் தென்கரையில் உள்ளது. திருக்குவளை என்று தற்போது அழைக்கப்படுகிறது. சப்தவிடங்கத் தலங்கள் எனப்படும் ஏழில் இது அடங்கும். குண்டையூரிலே கிடைத்த நெல் மலையைத் திருவாரூருக்கு எடுத்துவர இறைவனைச் சுந்தரர் வேண்டிய தலம் இதுவாகும்.

‘கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே’

நன்னிலம் காவிரித் தென்கரையில் 71ஆவது தலம். இதுவும் மாடக்கோயில். மயிலாடுதுறைக்கும் திருவாரூருக்கும் இடையே உள்ளது.


கோளிலி


திருப்பாதிரிப்
புலியூர்


மீயச்சூர்
Meeyachur


நன்னிலம்
சிவசிவ
சிவசிவ


பெண்ணாகடம்
Pennakadam


சீர்காழி


கலயநல்லூர்
Kalayanallur


நல்லூர்
Nallur

# மஹாராஷ்டிரம்

## - பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க. கதிர்காமநாதன்

# எல்லோரா குகைக்கோயில்

உலக பாரம்பரியங்களில் ஒன்றானது 'எல்லோரா' குகைக்கோயில் ஆகும். இது மஹாராஷ்டிரத்திலுள்ள அவுரங்கபாத் நகரிலிருந்து வடமேற்காக 30 கிமீ (சுமார் 18 மைல்) துரத்திலுள்ளது. இந்தியாவின் மலைக்குடைவு கட்டட நிர்மாணக் கலையின் உன்னத நிலையின் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது. அஜந்தாக் குகையைவிட இது பிரசித்தமானது.

சரணந்திரிக் மலைக்குன்றுகளின் நிலைக்குத்தான பாறைகளில் 34 குகைகள் குடையப்பட்டு இக்கோயிலில் உள்ளன. இவை 5ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டுவரை குடையப்பட்டுள்ளன. இக்கோயிலில், 12 புத்த குகைக் கோயில்களும் (1-12), 17 இந்து குகைக்கோயில்களும் (13 -29), 5 ஜெயின் குகைக்கோயில்களும் (30-34) உள்ளன. இவை அன்றைய சமய ஒற்றுமைக்கு உதாரணமாக விளங்குகின்றன. எல்லோரா குகைக் கோயில் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டதுமாகும்.

**பயணம்:**

நாங்கள் மும்பை நகரத்திலிருந்து காரில் சென்று பூனே நகரத்துக்குச் சமீபத்தில் இரவு தங்கி மறுநாட் காலை இவ்விடம் சென்றோம். ஓர் அழகிய இடத்துக்குச் சென்ற நிறைவு கிடைத்தது. புல் அழகாக வெட்டப்பட்டு, பாதை வகுக்கப்பட்டு போவோருக்கம் வருவோருக்கும் பாதை அமைத்து ஒரு பசுமையான பிரதேசத்தைக் கண்டோம். இடையே ஆலமரங்களும் இருந்தன. அவை பழையனபோலும். விழுதுகள் தூண்கள் போலப் பெரிதாக இருந்தன. 'ஆல்போல் தழைத்து' என்ற வரி நினைவுவந்து எமது மண்வாசனையை மனதில் கொண்டுவந்தது.

குகைக்கோயிலைப் பார்க்கச் சிறு கட்டணம் கொடுக்கவேண்டும். பெரியோர், குழந்தைகள் யாவரும் வருவதும் போவதுமாக இருந்தனர். குகைக் கோயிலை முதலிற் பார்த்தால் அது பெரிய மலையாகத் தோன்றாது. ஒரு கற்பாறை போன்றுதான் தோன்றும். கோயிலின் முன்னர் மூன்று படிகள் உள்ளன. சிறு படிகள்தான். அருகில், நடக்க இய லாதவர்க்கும் வழியுண்டு. வாசலின் பக்கத்தில் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அவைகள் காலப்போக்கால், மழை காற்று இவற்றால் மிக உறுப்பாகத் தோன்றவில்லை. வாசலின் மேல் தஞ்சாவூர்க் கோயிலில் இருந்தமாதிரி ஒரு பெரிய மலைத்துண்டு குறுக்காக 'கொங்கிறீட்' கல்போல் வைக்கப்பட்டிருந்தது. அதன்மேல் ஒரு பெரிய யன்னல் போன்று இடைவெளி. இந்த யன்னல் ஒரு மாடியின் யன்னலாகும். அருகிலிருந்து மக்கள், அங்கு வருவோரைப் பார்ப்பதை அவதானிக்க முடிந்தது.

இக்கோயிலுள் படங்கள் வீடியோ யாவும் எடுக்கலாம். வாசல் நேராக பிரசித்தி பெற்ற கயிலாச நாதர் கோயிலுக்கு கொண்டுசெல்கிறது. இது பதினாறாம் இலக்கக் குகையாகும். மிக முக்கியமானதும் பரம்பரை பரம்பரையாக, பல்லாண்டு காலமாக உருவாக்கியதுமாகும். அதிசயமான அமைப்புக் கொண்ட இக்கோயிலில் எப்போதும் மக்கள் நிறைந்திருப்பர். சிவ

பெருமானின் இருப்பிடமாகிய கயிலாயமலையைத் தோன்றும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதால் கயிலாசநாதர் கோயில் என இதைக் கூறுவர். பல மாடிகளைக்கொண்ட இக்கோயில் ஒரு வளாகம்போலத் தோன்றும். ஒரு தனிப் பாறையில் குடையப்பட்ட இக்கோயில் எதன்ஸ் நகரிலுள்ள பார்த்தினனிலும் இருமடங்கு பெரியதாகும்.

முதலில் நான் கண்டது இரண்டு பெரிய யானைகளே. ஒன்றுக்குத் துதிக்கை முறிந்துபோய் இருந்தது. திருமகளை அழகாக அமைத்திருந்தனர். இரண்டு யானைகள் பக்கத்தில் இருக்க தாமரையில் அமர்ந்த வண்ணம் இச்சிற்பம் பழுதடையாமல் நன்றாகவே இருந்தது. திருமால் அனந்தசயனத்தில் இருந்த சிற்பமும் கோயிலின் சுவரில் அழகாகச் சீரழியாமல் இருந்தது. அதற்கு அருகில், திருமாலின் அவதாரமாகிய நரசிம்மரையுங் கண்டோம். எம்மைக் கவர்ந்தது ஒரு சிவலிங்கத்தைச் சுற்றி 9 தலைகள் இருந்தமாதிரியான சிற்பந்தான். இதை நவக்கிரகங்கள் என ஊகித்தோம். இவைபோன்று பல சிற்பங்கள் மிக நேர்த்தியாக, வியக்கும் வண்ணம் இருக்கின்றன. இரண்டுமாடிக் கட்டடம் கொண்டதுதான் இக்கோயில். பெரிய நந்தியொன்று மத்தியில் இருக்கிறது. இதற்கு முன்னர் ஒரு மனிதனின் உயரத்தில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டோம். இதற்குப் பூசை செய்த அடையாளமாக, மலர்களும் தீபமும் இருந்தது. கோயிற் கோபுரம் திராவிட முறைப்படி அமைக்கப்பட்டிருந்தது. மிகச் சிக்கலான வகையில் இவைகளை அக்காலத்தில் எவரும் அதிசயிக்கத்தக்கதாக அமைத்திருக்கிறார்கள். சிவனும் பார்வதியும் கயிலையில் இருக்கும் தோற்றத்தையும் அதை இராவணன் கிளப்புவதுபோல் (தூக்குவது) சிற்பமும் இங்குண்டு.

மேல் மாடியைச் சுற்றிச் சிறார்கள் ஓடி விளையாடினார்கள். அவர்களின் கூச்சல் கும்மாளம் யாவும் இக் குகைக்கோயிலுக்கு உயிரூட்டின. இந்தியரின் புகழை, சிற்பக் கலையின் உன்னத நிலையைக் காட்டும் இக்கோயிலை நிருமாணிக்க 100 வருடங்கள் எடுத்தன என்றும் 200,000 தொன் கற்குன்றுகளைப் பயன்படுத்தினர் என்றும் அறிகிறோம்.

### சிவவழிபாடு:

சிவன் என்றால் செம்மை-சிவந்தவன், மங்கலமானவன் என்பவை ஆகும். சிவா என்ற சொல்லுக்குக் களங்கமற்றவர் அழிப்பவர் என்ற பொருளும் உண்டு. சிவவழிபாடு மிகத் தொன்மையானது. கிமு 3000 ஆண்டு சிந்து வெளி நாகரிகத்தை (திராவிட) அகழ்வாராய்ச்சி நடத்திய 'ஜோன் மார்ஷல' அக்காலத்தில் இலிங்க வழிபாடு, சிவவழிபாடு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதைவிட மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியின்போது சிவனை மூன்று தலையோடு தியான கோலத்தில் இருப்பதைக் கண்டனர். அவரைச் சுற்றி மிருகங்கள் இருந்ததையுங் கண்டு இது 'பசுபத' முத்திரை எனவும் அழைத்தனர். பசுபதி என்றால் உயிரினங்களின் தலைவன் என்பதாகும்.

வழிபாடு என்றால் வழிப்படுத்துவது. சரியான நல்லநெறியில், நல்வழியில் எமை ஈடுபடுத்துவதாகும். இவ்வழிபாட்டைச் சைவநெறி, சிவநெறி என்றுங் கூறுவர். சிவபெருமானுக்கு ஒரு வில்வம் இலையை வைத்து வழிபட்டாலே அதற்கும் அருள்புரிவார். கேட்டதெல்லாம் கொடுப்பார். அதனாலேதான் அவரைப் பித்தன் என்று அழைப்பர் போலும்.

கோபமே கொள்ளாத குனித்த புருவமுடைய சிவனை அடையச் சாதனம், முயற்சி வேண்டும். இதன்பின்தான் சாத்தியம். பூரண அநுகூலம் உண்டாகும். சிவாலயத்திற்குச் சென்று:

1. சரவணம் - சிவனின் புகழைக் கேட்டல்
2. கீர்த்தனம் பாடுதல் - தேவாரம்
3. ஸ்மரணம் - நினைத்தல் - நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் சிவனை நினைத்தல்.
4. பாதசேவை - பாதம் வணக்கம்
5. அர்ச்சனை - பூசை செய்தல்
6. வந்தனம் - நமஸ்கரிதத்தல்
7. தான்யம் - தொண்டு புரிதல் - நெய்பவை யாவும் வழிபாடாகும்

சிவனை காலையிற் தரிசிக்க - நோய் தீரும்.
நண்பகலிற் தரிசிக்க - தனம் பெருகும்
மாலையிற் தரிசிக்க - பாவம் அகலும்
அர்த்த சாமம் தரிசிக்க - வீடுபேறு கிடைக்கும்

சிவவழிபாட்டைப் புற வழிபாடு - அகவழிபாடு எனப் பகுத்துக் கூறுவர். இதில், சரியை நெறி உடம்பாற் செய்யப்படும் வழிபாடாகும். கோயிலுக்குச் சென்று, புனிதப்படுத்தி, மாலை தொடுத்து, புகழ்பாடி, விளக்கேற்றி, அடியார்களுக்குப் பணிவிடை செய்தலாகும். இது புறவழிபாடாகும். இதற்கு உதாரணமாக நாவுக்கரசரின் உளவாரப் பணியைக் கூறலாம்.

கிரியை நெறி புறமும் அகமும் சேர்ந்த வழிபாடாகும். இதை 'அகப்புற வழிபாடு' என்பர். இதை அதிபுத்திரமார்க்கம் எனக்கூறுவர். இதற்கு உதாரணமாக, திருஞானசம்பந்தரைக் கூறுவர். சிவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் நினைத்து வழிபடுதல். சிவனை மலரால், தீபத்தால், தூபத்தால், அமுது படைத்தலால் வணங்குவது. பின்னர் சிவனை மனத்தால் மனத்தில் நிலைநிறுத்தி வழிபடுவது. இதனை

**நீடு மலரும் புனலும் கொண்டு நிறம் தரம்**
**தேடு மடியார் சிந்தையுள்ளே திகழ்வானைப்**
**பாடம் குயிலின் அளவே கிள்ளை பயின்றேத்த**
**மூடும் கோலமுகில் தோய் கோயில் முதுகுன்றே**

என்று திருஞானசம்பந்தர் பாடினார்

யோகமென்றால், சிவனோடு உயிர் ஒன்றுசேர்வது என்பர். இது அகவழிபாடு ஆகும். மனதால் மட்டும் இவரை வழிபடுவதாகும் இதனைத் தோழமை நெறி - சகமார்க்கம் என்பர் சிவனும் தொண்டரும் - வழிபடுபவரும் - நண்பர் போன்று தோன்றுவர். சுந்தரர் இதற்கு உதாரணமாகும்.

நமது இதயத்திலே இருப்பவன் இறைவன். சிவனவனை உள்ளத்திலே தேடுவது இம் முறையாகும். மனதைத் தடுத்தி யோகாசனம் மூலம் அட்டாங்கம் செய்து கடைசியில் சமாதி அடைவதுதான் இதன் முடிவு. உடலின் கீழ் இருக்கும் குண்டலினி எழும்பிச் சிரசுக்குச் சென்று 'யோகம்' -சிவதரிசனம் பெறுவதாகும்.

நாயகன் -நாயகி, காதலன் -காதலி போன்ற சிவவழிபாடைச் சன்மார்க்கம் என்பர். சிவனோடு இரண்டறக் கலந்து இன்பமடைவது. மாணிக்கவாசகரின் வழிபாட்டை ஞானத்துக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர். காதலன்- காதலி போன்ற உறவு, அழுது அழுது நினைந்து நினைந்து

உருகிச் சிவனை அடைவது. இவருக்குத் திருப்பெருந்துறையில், குருந்த மரத்தடியில் சிவன் தன் திருவடியால் தீட்சை கொடுத்து உபதேசம் செய்தார்.

சரியை கிரியை யோகம் ஞானம் இந்நெறிகளில் எவற்றாலும் அரனை அடையலாம் ஆனால் ஞான நெறிக்கு ஈடு இணை இல்லை. நாங்கள் போயிருந்த சமயம் திருப்பெருந்துறையில் (ஆவுடையார் கோயில்) சிவனருளால் குருந்தமர பூசை பார்க்கும் பேறு கிடைத்தது. இதை யாவரும் கண்டு அநுபவிக்கவேண்டும். இது மயிர்க்கூச்செறியும் அநுபவமாகும்.

விரதங்கள் இருப்பதும் சிவவழிபாடு ஆகும். விரதமென்றால் நோன்பு. உண்ணாமல் இருந்து வழிபடுவது. ஒன்றையே தீவிரமாக உறுதியாக நினைத்து, மனதை ஒருநிலைப்படுத்துவதாகும்.

சிவனுக்குச் சோமவார விரதம், உமாமகேசுவர விதம், சிவராத்திரி விரதம், திருவாதிரை விரதம், கல்யாண விரதம், பாசுபத விரதம் (தைப்பூச தினத்தில்), அஷ்டமி விரதம், கேதாரகௌரி விரதம், பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் ஆகியவை உள்ளன. இவற்றுள், சிவராத்திரி விரதமே சிறந்தது.

## சிவராத்திரி

சிவராத்திரியிற் பலவகையுண்டு. ஆனால் மாசி மாதத்தில், தேய்பிறையில் வரும் சதுர்த்தி திதியில் வரும் சிவராத்திரியே மிகச் சிறந்தது. இந்நாளில் விரதம் இருப்தோடு, இரவு முழுவதும் நித்திரை விழித்தல் வேண்டும். சிவபூசையும் சிவவழிபாடும் இத்தினத்திலே செய்வர். அகங்காரம் ஒழித்து அன்போடு வழிபாடு செய்வோருக்கு சிவன் அருள்புரிவார். நான்கு சாமமும் வழிபாடு உண்டு. சிவராத்திரியில் உபவாசம் இருக்க இயலாதோர், நீரேனும் பாலேனும் அருந்தலாம். விரதமிருப்போர் அடுத்தநாட் காலை பாரணம் பண்ணவேண்டும். பின்னர் பகலிலே நித்திரை செய்யக்கூடாது.

சிவராத்திரியில் வரும் இலிங்கோற்பவ காலம் இரவு *11.30* தொடக்கம் *12.15* மணிவரையாகும். முழு நேரம் கண்விழித்த இருக்க முடியாதோர் இக்காலம் வரையாவது விழித்திருப்பது விசேடம்.



**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

# “நான்”

முன்பொருகாலத்தில் ஒரு ஞானி இருந்தார். அவரைக் காண அந்த நாட்டு அரசனும் அரசிளங்குமரனும் மிக ஆவலாயிருந்தார்கள். அரசனும் தன்மகனிடம், ‘நீ போய் அந்த ஞானியிடம் ஆசி பெற்று வா!’ என்று சொல்லி அவனை அனுப்பினார். மகனும் அவ்வாறே அந்த ஞானியிடம் சென்றான். அந்த ஞானி இருந்த குடிசைக்கு வந்த அரசிளங்குமரன் குடிசை வாயிலை அடைந்து கதவைத் தட்டினான்.

உள்ளே இருந்த ஞானி, “யார்-அங்கே?” எனக் கேட்டார்.
“நான்”தான் அரசிளங்குமரன் வந்திருக்கிறேன்” என்றான் மிடுக்குடன்.

“நான்” செத்த பிறகு வா! அப்போது பார்க்கலாம் என்றார் ஞானி.

அரசிளங்குமரனுக்கோ, ஞானி என்ன சொல்கிறார் என்று விளங்கவில்லை. அதைப்பற்றி நினைத்தபடியே அரண்மனைக்குத் திரும்பினான். அவனால் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை.

சிறிது நேரத்தின்பின் அவன் தந்தையைப் பார்த்து, ஞானியார் “நான்” செத்த பிறகு வா! அப்போது பார்க்கலாம்! என்று சொன்னதன் அர்த்தம் என்னவென்று வினவினான்.

அரசனுக்கு விளங்கிவிட்டது. ஆனால் அவன் மகனுக்கு அதன் அர்த்தத்தை விளக்கவில்லை. சொற்பநேரத்தின் பின், “மகனே! நாளைக்குக் காலை என்னுடன் வா? அந்த ஞானியை இருவரும் ஒன்றாகச் சென்று பார்ப்போம்” என்றான்.

மறு நாளும் வந்தது.

இருவரும் ஞானியார் இருந்த குடிசைவாயிலை அடைந்தனர். அரசன் தானே முன்சென்று வாயிற்கதவைத் தட்டினான்.

ஞானியாரும் வழமைபோல், “யாரங்கே”? என்றார்.

அரசனும், “அடியேன் தங்களைக் காண வந்திருக்கிறேன்” என்றான்.

உடனே, ஞானியார் எழுந்து வந்து அரசனை, கதவைத் திறந்து வரவேற்றார்.

அரசன் உடனே தன் மகனைத் திரும்பி நோக்கி, “மகனே, நான் இறந்த பிறகு வா! என்பதன் அர்த்தம் விளங்கிவிட்டதா?” என்று கேட்டான்.

“புரிந்துவிட்டது அப்பா! ‘நான்’ என்ற ஆணவத்தை விட்டுவிட்டு வா, என்ற அர்த்தம் எனக்கு நன்றாக விளங்கிவிட்டது” என்றான் இளவரசன்.

“ஞானம்” என்று வரும்போது மற்றவையெல்லாம் “வெறுமை” என்ற பதத்துள் வந்துவிடும்.

# பொங்கலோ பொங்கல்

செந்நெற் களனியெலாம் செழிப்புற்று வந்திடுமேல்
பன்னும் உயிரினங்கள் பாரினிலே பசிநீக்கும்
அன்னம் அளித்திடுவோம் அவர்பசியைத் துடைத்திடுவோம்
என்றுசொலிப் 'பாற்பொங்கல்' ஏருழவர் பொங்குகிறார்

நாட்டினிலே என்மக்கள் நல்லபெயர் பெற்றிடுவார்
வீட்டினிலே மனையாளும் விருந்தோம்பிச் சிறப்புறுவாள்
ஈட்டிடுவேன் பொருள்நிறைய இவர்க்கெல்லாம் எனுநினைவில்
வாட்டமிலாக் கணவரெலாம் 'வெண்பொங்கல்' பொங்குகிறார்

என்கணவர் தன்தொழிலில் ஏற்றமுடன் இருந்திடுவார்
என்மக்கள் கல்வியிலே ஈட்டிடுவார் நற்புகழை
என்சுற்றம் இனிதாக இருக்கவென வாழ்த்திடுவோம்
என்றெண்ணி மாதரெலாம் 'இனிமையுடன்' பொங்குகிறார்

பொங்கலென வந்துவிட்டால் புதிதாய்ப்பட் டாடைவரும்
மங்கலமாய்க் கொண்டாட மனமெல்லாம் நிறைவுபெறும்
இங்கெமது நண்பருடன் இனிதேநாம் களித்திடுமிப்
பொங்கலென்று சிறுவரெலாம் 'பெருமகிழ்வாற்' பொங்குகிறார்

*அநுராதா*

# படித்தவர் பகிர்வுவை......

## முத்து விழாவில் முத்தமிழ்க் கலசம்

மொட்டவிழ்த்த தாமரையின் பட்டிதழ்போல் எழில் கொஞ்ச
ஆன்மிகத் தத்துவத்தின் அறநெறியின் மணம் வீச
அகிலமெலாம் அன்புநெறி பரப்பி
மக்கள் சேவையே மகேசன் சேவையென
மனதில் நிறுத்தி சமயத்தி னூடாக சமூக சேவையெனும்
தார்மிக கடமை பூண்ட இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்
களமமைத்து வெளிக்கொணரும் **"கலசம்"**எனும் கலைக்களஞ்சியம்!
எரிந்து கருகிய எம் தேசத்தின் எச்சங்களாய் புலம்பெயர்
நாட்டில் புகுந்த வேளை
வாழ்க்கையின் திசையறியாமல் தமிழ்ச் சமூகம் திகைத்து நின்ற வேளை
கலக்கம் வேண்டாம் இதோ கைகொடுக்க நாமுண்டு என எழுந்ததுதான்
**சைவ முன்னேற்றச் சங்கம்!**
38 ஆண்டு காலத்தின் சுழற்சியில் சேவையின் தேவையறிந்து
ஆற்றிவரும் தொண்டின் சிகரமாய் மகுடம் சூட்டியது போல
சுடரொளி வீசும் கலசமெனும் காலாண்டு இலவச இதழ்!
தமிழும் சைவமும் இணைந்து இருவிழி கொண்டு ஒருபொருள்
சேர்க்க மதமும் மொழியும் மாண்புற வேண்டி அதன் மகத்துவம்
மிளிர இறையுணர்வோடு இன்பத் தமிழில் இலக்கியமாகவும்
கவிதை என்றும் கட்டுரை என்றும் சிறுவர் மனதில் செதுக்கி
வரைந்த சித்திரமாக சிறுவர் பகுதியும் கற்றோர் மற்றோர்
கரங்களில் தவழ 80 என்ற எல்லையும் தாண்டி புதுமை
பொங்கும் புதுப்புனலாக இப்பொங்கல் திருநாளில் பொலிவுடன்
பிறக்க இறைவன் இணையடி இறைஞ்சி நிற்கும் இரசிகை நான்.

திருமதி புவனேஸ்வரி சபாரட்னம்

போனமுறை வெளிவந்த இதழ், நவராத்திரி காலத்தில் வந்ததற்கு ஏற்றமாதிரிச் சரசுவதியின் படத்தை அட்டைப்படமாக அலங்கரித்தது இரசிக்கக் கூடிதாக இருந்தது. "பண்டைய இலக்கியமும் பண்பான வாழ்க்கையும்" என்ற கட்டுரை மிக அருமையாக இருந்தது. பண்டைக்கால இலக்கியங்கள் பலவற்றை (அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, குறள், திருமந்திரம், நளவெண்பா, இன்னும் பல) எடுகோள்களாக எடுத்து விளக்கியிருந்தமை பாராட்டுக்குரியது. தமிழ் இலக்கியத்தின் பெருமையை வாசகர்கள் அறிந்து பயன்பெற இத்தகைய கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருதல் அவசியம். பொதுவாக எல்லாக் கட்டு ரைகளும் சமைய அறிவை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. அடுத்த இதழ் எண்பதாவது இதழ் என்பது பெருமைக்குரியது. தொடர்க.....! வளர்க இந்த அரும்பணி.

திருமதி த .மனோகரன்.

# இறைவனின் திருவிளையாட்டில் இலங்கேஸ்வரன்

## - வை.சி.செல்வர்

இலங்கையை ஆண்ட மன்னன் இராவணன். அவனை இலங்கேஸ்வரன் என்றும் கூறு வார்கள். அந்த இராவணன் ஒரு சிவபக்தன். அவனைப் பற்றிய கதைகள் பல உண்டு. அதில் இறைவனுக்கும் விக்கினங் களைத் தீர்க்கும் விநாயகப்பெருமான் என்று நாம் வணங்கும் பிள்ளையாருக்கும் இடையில் அகப்பட்ட ஒரு இலங்காபுரி மன்னனின் கதையைப் பார்ப்போம்.

இலங்காபுரி மன்னனாகிய இராவணன் வரம்வேண்டிக் கயிலைமலை சென்று சிவ பெருமானை இறைஞ்சிக் கடும் தவம் மேற்கொண்டான். அவனின் தவவலிமையை உணர்ந்த எம்பெருமான் அவன்முன் தோன்றி, "உன் தவவலிமையை அறிந்துகொண்டோம். நீ என் மீது அளவிலாத பற்றுக்கொண்டவன். நீ இதுவரை என்னிடம் எதுவும் கேட்டுப் பெற்றுக் கொண்டதில்லை. இராவணா! நீ கேட்கும் வரம் யாது? கேள்?. தருகிறேன்."என்றார்.

இராவணனும் தன் முன்தோன்றிய கயிலையம் பதிவாழ் கைலாசநாதனைக் கண்டு அகம் மகிழ்ந்து பெருமானை பலமுறை வலம் வந்து வணங்கி, இருகரம் தூக்கித் துதித்து, "மூவுலகத்தையும் காக்கும் இறைவா! எனக்கு நீங்கள் ஒரு வரம் தந்தருளவேண்டும். சொர்க்கம், நரகம் முதலான அனைத்து உலகங்களும் ஒரு நாள் அழிந்துபோகும் காலத்திலும் நான் வாழ்ந்து வரும் இலங்காபுரி நகரம்மட்டும் என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்க வேண்டும் என்று எம்பெருமான் அருள்புரிய வேண்டும்." என்று வேண்டினான்.

பக்தனின் வேண்டுகோளை தட்டமுடியாமல் ஒரு கணம் யோசித்துவிட்டு, "நீ என்னுடைய பக்தன். பக்தனின் கேட்கும் வரத்தை தருவதுதானே என் தொழில், இதோ நீ கேட்ட வரத்தை நான் அளிக்கிறேன்" என்று கூறி தன் கையால் ஒரு சிறு சிவலிங்கத்தை எடுத்து, "இதோ இதைப்பெற்றுக்கொள்" என்று அந்தச் சிறிய சிவலிங்கத்தை இராவணனது கையில் வைத்தார். இராவனன் மிகுந்த மகிழ்ச்சியுன் அதைப் பெற்றக்கொண்டான். "இராவணா! இன்னுமொன்று கூறுகிறேன் கேள்! சில நியமங்களுடன்தான் இச்சிவலிங்கம் உன்னிடம் தரப்படுகிறது. நீ இச்சிவலிங்கத்துடன் உனது நாட்டிற்கு நடந்தே போகவேண்டும். எந்த ஒரு வாகனத்திலும் நீ சிவலிங்கத்தைக் எடுத்துக் கொண்டுபோகக்கூடாது. அத்துடன் எக்காரணம் கொண்டும் சிவலிங்கத்தை நிலத்தில் வைக்கக் கூடாது. அப்படிப் பூமியின்மீது வைப்பாயாயின் உன்னால் மீளவும் அதைப் பெறமுடியாது. இதை நினைவில் வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு எம்பெருமான் மறைந்தார். இராவணனும் மிகுந்த பூரிப்புடன் இறைவன் திருநாமத்தை உச்சரித்தபடியே இறைவன் தன் கையிலே தந்த அந்த ஆத்மலிங்கத்தைப் பெற்றுகொண்டு காடு, மலை, வனாந்திரம் என்று நடந்து இலங்காபுரியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அந்த ஆத்மலிங்கமோ அதிசக்தி வாய்ந்தது. அது ஒளிமயமானது.

இராவணன் ஓர் அரக்கர்குலத் தலைவன். அவனைப்பற்றித் தேவகணங்கள், சொர்க்க லோக அரசனான தேவேந்திரனிடம் சென்று, இராவணன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தையும் அதனால் தேவர்களுக்கு ஏற்படப்போகும் பேராபத்தையும் கூறி முறையிட்டனர். தேவேந்திரனோ தனக்கும் தன்னைச் சேர்ந்த தேவர்களுக்கும் எதுவும் நேராமல், தன் குலத்தை எவ்வாறு காப்பது,

அதுவும் இலங்காபுரி அரசனான அந்த அரக்கனால் எதுவும் நேரக்கூடாது என்று முடிவெடுத்தான். எல்லா உலகங்களும் அழிந்தாலும் தானும் தன்னுடைய இலங்காபுரி மட்டும் அழியக்கூடாது என்று எவ்வாறு அவன் வரம் கேட்கலாம். இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்றெண்ணித் தன்னுடன் தேவர் களையும் அழைத்துக்கொண்டு வரம் கொடுத்த சிவபெருமானிடமே போய்க்கேட்போம் என்று கயிலைமலை சென்றான்.

சிவனிடம் போவதற்குமுன், விக்கினங்கள் தீர்க்கும் விநாயகரை வழிபட்டு, வணங்கி, தூய கங்கை நீரால் அபிடேகம் செய்து வணங்கினான். விக்கினம் தீர்க்கும் விநாயகரோ எப்போதும் பக்தர்களிடம் சிறு சிறு விளையாட்டுகள் செய்வது வழக்க மல்லவா!. “இந்திரனே! நீ எந்த நேரமும் சொர்க்கத்தில் சுகபோகங்களுடன் இருப்ப தைவிட்டு, இங்கு வந்த காரணம் தான் யாது?” என வினவினார். “இராவணன் என்றொரு அரக்கன், அதுவம் இலங்காபுரியை ஆள்பவன். உலகங்கள் அழிந்தாலும் தன்னுடைய இலங்காபுரி மட்டும் அழியக்கூடாது என்று சிவனிடம் வரம் வாங்கி, ஒரு சிவலிங்கத்தையும் பெற்றுக்கொண்டு தன் நாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறானாம். அவன் அங்கு போய்ச்சேருமுன் அவனுக்கு ஒரு விக்கினத்தை உண்டாக்கி அவனது வரத்தால் தேவர் குலத்திற்கு நாசம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கூற வந்தேன்” என்று பயபக்தியுடன் தேவேந்திரன் கூறினான்.

நடந்தவற்றையெல்லாம் தன் ஞானக்கண்ணால் அறிந்து கொண்ட விநாயகர், தேவர்குலத்தைக் காக்க எண்ணி, வருணபகவானை அழைத்து இராவணனுடைய வயிற்றில் நீர் உபாதையை ஏற்படச் செய்தார். சிவலிங்கத்தைக் கையில் வைத்துக்கொண்டு நடந்து சென்ற இராவணன் தன்னுடைய இலங்காபுரியை அடையச் சில பொழுதுகளே இருந்தன. திடீரெனத் தனக்கு ஏதோ வயிற்றினுள் உபாதையாயிருக்கிறதே! என்ன செய்வது? வித்தியாயசமாக எதுவும் உண்ணவில்லையே! என எண்ணி, நிலை தழும்பி, அங்குமிங்கும் அலைந்தபோது, ஒரு அந்தணச் சிறுவன் நடந்து போவதைக் கண்டான். அச்சிறுவனோ தனக்கு எதுவும் தெரியாதவன் போல் நடந்துகொண்டிருந்தான்.

இராவணன் அவனைத் தம்பி என்று கூவியழைத்து, “டேய் தம்பி, எனக்கு ஒரே நீர் உபாதை யாயிருக்கிறது. ஒரு சிறு பொழுது இந்தச் சிவலிங்கத்தை உனது கையில் தருகிறேன். நீ, அதைக் கீழே வைக்காமல் வைத்திரு. நான் நீர் உபாதை கழிந்தவுடன் வந்து பெற்றுக் கொள்கிறேன்.” என்று கூறி அந்த அந்தணச்சிறுவன் கையிலே சிவலிங்கத்தைக் கொடுத்தான். சிறுவனோ, ‘சரி பெரியவரே, நானோ சிறுவன். ஏன்னால் நீண்டநேரம் இச்சிவலிங்கத்தைக் கையில் வைத்திருக்கமுடியாது. ஆனாலும் உமக்காக, நீங்கள் படும் அவஸ்தையைக் கண்டும் இயலாதென்று சொல்ல முடியவில்லை. எதற்கும் நான் மூன்று முறை கூப்பிடுவேன். அப்படியும் நீங்கள் வராவிட்டால் நான் லிங்கத்தை கீழே வைத்துவிடுவேன்’ என்றான்.

நீர் உபாதையை நீக்க மறைவிடம் சென்ற இராவணன் உபாதையை நீக்கிவிட்டு வருவதற்குள், அந்தப் பிராமணச்சிறுவன் கையில் வைத்திருந்த சிவலிங்கத்தின் பாரத்தைத் தாங்கமுடியாமல் இராவணனை மூன்றுமுறை கூவியழைத்தான். பாரமோ தாங்கமுடியவில்லை. கீழே அமர்ந்து கையில் இருந்த லிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டான். பிராமணச்சிறுவனின் கூக்குரல் கேட்டு, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு வருவதற்குள், தான் தவமிருந்து பெற்ற சிவலிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டானே என்றறிந்து, ஆத்திரப்பட்டு என்னசெய்வதென்று அறியாமல், நிலத்தில் ஓங்கி அறைந்து, வீறிட்டு எழுந்து அச்சிவலிங்கத்தை இரண்டு கைகளினாலும் பெயர்க்க முயன்றான் இராவணன். ஆனால் லிங்கத்தை அசைக்கக்கூட முடியவில்லை. சிவலிங்கம் மிக ஆழமாக வேரூன்றிவிட்டதா? என்ன? சிவன் தனக்கு இட்ட நிபந்தனையை எண்ணி எண்ணி மறுகினான். ஐயகோ! பிழைவிட்டுவிட்டேனே

என்று அலறினான். ஆங்கும் இங்கும் வெறி பிடித்தவன்போல் அலைந்தான். சரி, மீண்டும் ஒரு முறை முயற்சிக்க எண்ணி தன் முழு உடற்பலத்தை ஒருமுகப்படுத்தி பெயர்க்க முயன்றபோது அந்த லிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து ஒளிவீசத் தொடங்கியது.! என்ன அதிசயம். இதனாலேதான் இந்த இடத்தை, வானோரும் வையத்தாரும் கோகர்ணம். (கோ-பசு, கர்ணம் - காது) என்று அழைத்தார்கள். இது மகாபலம் பொருந்திய லிங்கம் என எண்ணிக்கொண்ட இராவணனின் கோபம் அப்பிராமணச் சிறுவன் மீது மீண்டும் விழுந்தது.. அப்பிராமணச்சிறுவனின் தலையில் தன் கையால் ஓங்கிக்குட்டினான்.

உடனே அப்பிராமணச்சிறுவன் தன் சுய உருவத்தைக் காட்டி, தன் தும்பிக்கையால் இராவணனைச் சுழற்றி, அவன் தலை வானத்தின் முகட்டின்மீது போகும்படி எறிந்தார். மேலெழுந்த இராவணன் கீழே விழும்போது பாதாளலோகத்தில் அழுந்தும்படி செய்தார். இதனால் ஏற்பட்ட வலியினைத் தாங்கமுடியாத இராவணனின் நாடி நரம்புகளெல்லாம் நொறுங்கத் தொடங்கின. மரண வேதனையைத் தாங்கமுடியாத இராவணன் விநாயகரை அடிபணிந்து வணங்கி, அடியேன் செய்த தவறைப் பொறுத்தருளவேண்டும் என்று வேண்டினான். விநாயகரும் புன்னகையுடன் மன்னித்து அவனை தன் தும்பிக்கையின் பிடியிலிருந்து விடுவித்தார்.

'இராவணா!. நீ என் தலையில் குட்டினாய். நீ எவ்வாறு குட்டினாயோ அதேபோல் உன் தலையில் நீ குட்டிக்கொள்' என்றார் விநாயகர். உடனே இராவணனும் தன் தலையில் இரு கைகளாலும் ஓங்கிக் குட்டினான்.

"இவ்வாறு பக்தர்கள் யாராவது எனை வணங்கி, தங்கள் குற்றங்களை உணர்ந்து தங்கள் தலையில் குட்டுவார்களேயனால் அவர்களின் குறைகளை நாம் தீர்த்து வைப்போம்" என்று கூறி, இராவணன் கேட்ட வரங்களையும் அளித்து விநாயகர் மறைந்தார்.

**பின்குறிப்பு:- தன்னுடைய தாய் வழிபடுவதற்காக ஆத்மலிங்கத்தை சிவனிடமிருந்து பெற்றதாகவும் ஒரு வரலாறு உண்டு. கோகர்ணா என்று அழைக்கப்படும் ஆத்மலிங்க கோயில் கர்நாடக மாநிலத்தில் மேற்கு அரபிக்கடலோரக்கரையைச் சார்ந்து உள்ளது. இக்கோயிலைத் தென் இந்தியாயவின் காசி என ஸ்கந்த புராணம் கூறுகிறது.**

## சிதம்பரம் கோயில் ஸ்ரீநடராஜப் பெருமான்

**கோயில்பற்றிய விரிவான தத்துவம் சிதம்பரம் போன்ற ஆலயத்தில் அமைந்திருக்கின்றது. உபாசனைக்குரிய மூர்த்தியாகிய நடராஜர் நான்கு ஸ்தம்பங்களை உடைய ஒரு கொலுமண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த நான்கு ஸ்தம்பங்கள், நான்கு வேதங்களின் சின்னமாகும். அதற்குச் சற்று முன்பு ஆறு தூண்களுடைய மண்டபம் இருக்கிறது. பதினெட்டுப்புராணங்களுக்கு அவை அறிகுறியாய் அமைந்துள்ளன. நடராஜரின் அருகிலே செல்லுதற்கு ஐந்து படிகளால் மேலே ஏறியாக வேண்டும். சிவனுடைய திருநாமமாகிய பஞ்சாட்சரம் அல்லது ஐந்தெழுத்தின் சின்னமாக இந்தப் படிகள் அமைந்துள்ளன. நடராஜருக்கு இடப்புறம் சிவகாமி அம்மையார் எழுந்தருளியுள்ளார். வலப்புறம் சிதம்பர இரகசியம் அமைந்திருக்கிறது. இதிலும் மேலான கோட்பாடு புதைந்திருக்கிறது. பராசக்தியின் அருளால் சற்குண பிரம்மமாகிய பிறகு நடராஜமூர்த்தியின் தரிசனம் கிட்டுகிறது. சற்குண பிரம்மம் பிறகு நிர்க்குண பிரம்மத்திற்கு வழிகாட்டுகிறது. நிர்க்குண பிரம்மத்தை அடைந்த ஜீவன் திரும்பவும் ஜீவபோதத்திற்கு வருவானாகில் சற்குண பிரம்மத்திற்கு வந்து கீழிறங்கி வருகிறான். சிதம்பரத்தில் நிகழும் தீபாராதனை இக்கோட்பாட்டை விளக்குகிறது.**

**-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்**

# தேவாரம் என்ற சொல்லின் பொருள் என்ன?

தேவ + ஆரம் = தேவாரம் (இறைவனுக்குச் சூடும் மாலை) என்று கூறுவது பொருத்தமாக அமைந்தாலும் உண்மைப் பொருள் அதுவன்று.

வாரம் என்பது இசைப்பாட்டில் ஒரு நடை. பரத நாட்டியத்தில் பதம் பாடுபவரை "வாரம் பாடுபவர்" என்று அழைப்பர். (வாரம் பாடும் தோரிய மடந்தையும் - சிலப்பதிகாரம்) இசைப் பாட்டில், முதலாங்காலத்திலே பாடுவதை, முதல்நடை என்றும், இரண்டாங்காலத்திலே பாடுவதை வார நடை என்றும், மூன்றாங்காலத்திலே பாடுவதைக் கூடைநடை என்றும், நாலாங்காலத்திலே பாடுவதைத் திரள்நடை என்றும் அழைப்பர். தேவாரம் பாடும்போது முதல் நடையிற் தொடங்கி வாரநடையில் முடிப்பது வழமை. தே = தேவன். தேவனை வாரநடையில் வழிபாடு செய்வது தேவாரம் என்று கருதலாம். (வீரன் மேவிய வேற்காடு வாரமாய் வழிபாடு செய்தவர் - திரு ஞானசம்பந்தர்) ஆனால் உண்மைப் பொருள் அதுவன்று.

வாரம் என்றால், "குத்தகை" என்று ஒரு பொருள் உண்டு. "நிலத்தை வாரத்துக்கு விடுதல்" என்று கூறும் வழக்கம் உண்டு. இந்த உடம்பை இறைவனிடம் குத்தகைக்குப் பெற்றிருக்கின்றோம். அப்படிப்பட்ட உடலாற் செய்யும் வழிபாடு என்பதைத் தேவாரம் என்று கூறலாம். ஆனால் அதுவும் உண்மைப் பொருள் அன்று.

**உண்மைப் பொருள்:**
வாரம் என்றால் "இடம்". (தாழ்வாரம், மலை அடிவாரம் என்பதுபோல்) தேவாரம் = "தெய்வம் இருக்கும் இடம்" என்பதே சரியான பொருளாகும்.

பழைய தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களே இதற்கு ஆதாரம். இராஜராஜன் கல்வெட்டுகளில் தேவாரம் என்ற சொல் இந்தப் பொருளிற் கையாளப்பட்டு, கோயில், பூஜை, பூஜைப்பெட்டி, விக்கிரகம் போன்ற யாவுமே தேவாரம் என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்றன. உ+ம்: "யாம் இந்தத் தேவாரத்தின் (கோயிலின்) உள்ளால் நின்று பிறப்பிக்கும் கட்டளை". "உடையார் ராஜராஜர் தேவாரத்திற்குத் (பூஜைக்கு) திருப்பதிகம் விண்ணப்பிப்பார்" (ஓதுவார்கள்). கோயில் விக்கிரகத்தைத் தேவாரம் என்று வழங்குதலைக் கேரளத்தில் இப்போதும் காணலாம்.

ஆகவே, தேவாரம் என்பது சிவபெருமான் திருமேனியாகக் கொண்டிருக்கும் வடிவங்களில் ஒன்றாகும். சிவபெருமானே தேவாரம். இதனாற்றான் சைவர்கள் தேவாரத்தைப் பூஜாமூர்த்தியாகக் கொண்டு, ரிஷப வாகனத்தில் தேவாரத் திருமுறைகளை அடுக்கி எல்லா உபசாரங்களையும் பண்ணிச் சிவபெருமானாகவே பாவிப்பர். பாவனா அபிஷேகம் பண்ணுவர். தூப தீபம் காட்டுவார்கள்.வேறு எந்த நூலுக்கும் இந்தப் பெருமை கிடையாதது தமிழுக்கும் தேவாரத்துக்கும் கிடைத்தபேறாகும்.

**பேராசிரியர் வயித்திலிங்கம் - மக்கள் தொலைக்காட்சியிலே பண்ணிசை வித்தகர்கள் என்னும் நிகழ்ச்சியிற் கூறியது.**



# சிவயோகம்

## அருள்மிகு இலண்டன் நடராஜர் திருக்கோயில்

3c, Ranelagh Road, Wembley HA0 4TW. Tel: 020 8795 4258.




# சிவராத்திரி இலட்ச்சார்சனை

(24.02.2016 புதன்கிழமை தொடக்கம் 07.03.16 திங்கட்கிழமை வரை)

பக்த பெருமக்களுக்கு வணக்கம்

எல்லாம் வல்ல இலண்டன் சிவகாமசுந்தரி உடனுறை சிதம்பரேஸ்வரர் திருவருளுடன் மஹாசிவராத்திரியை இறுதி நாளாகக்கொண்டு எதிர்வரும் 24.02.2016 புதன்கிழமை தொடக்கம் 07.03.16 திங்கட்கிழமை வரை காலை வரை மரகதலிங்கேஸ்வர பெருமானுக்கு இலட்சநாமார்ச்சனை கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

**24.02.2016 புதன்கிழமை தொடக்கம் 07.03.16 திங்கட்கிழமை வரை காலை வரை**

காலை 10.30 மரகதலிங்கேஸ்வரர் அபிஷேகம்
11.15 பகற் பூஜையை தொடர்ந்து மரகதலிங்கேஸ்வரர் இலட்சார்ச்சனை தொடர்ந்து தீபாராதனை
மாலை 06.00 மரகதலிங்கேஸ்வரர் அபிஷேகம்
07.00 மாலை பூஜையை தொடர்ந்து மரகதலிங்கேஸ்வரர் இலட்சார்ச்சனை தொடர்ந்து தீபாராதனை

## மஹாசிவராத்திரி 07.03.16 – திங்கட்கிழமை

**முதலாம் காலம்:** மாலை 06.15 மணிக்கு - அபிஷேகம், 07.30 மணிக்கு - பூஜை
**இரண்டாம் காலம்:** இரவு 08.45 மணிக்கு - அபிஷேகம், 10.00 மணிக்கு - பூஜை
**மூன்றாம் காலம்:** இரவு 11.15 மணிக்கு - அபிஷேகம், 12.30 மணிக்கு - பூஜை
**நான்காம் காலம்:** இரவு 2.30 மணிக்கு -108 வலம்புரி சங்காபிஷேகம், அதிகாலை 5.00 மணிக்கு - பூஜை

## சிவராத்திரி சிறப்புகள்

சிவனுடைய விரதங்கள் 8. அவை 1.சோமவார விரதம், 2.உமாமகேஸ்வர விரதம், 3.திருவாதிரை, 4.கல்யாண விரதம், 5.பாசு பதம் (தைப்பூசம்), 6.அட்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அட்டமி), 7.கேதார விரதம், 8.மஹாசிவராத்திரி விரதம். இவ்வெட்டு விரதங்களில் மிக உன்னதமானது மஹாசிவராத்திரி விரதம்.

நதிகளில் சிறந்தது கங்கை, விண்மீன்களில் சிறந்தது கதிர், மரங்களில் சிறந்தது கற்பகம், தேவர்களில் சிறந்தவர் திருமால், பசுக்களில் சிறந்தது காமதேனு, மலைகளில் சிறந்தது இமயம். இதைப்போல விரதங்களில் சிறந்தது சிவராத்திரி. சிவம் என்ற சொல்லுக்கு துக்காதிகளைப் போக்குகின்றது என்பது பொருள். ராதி - சுகநிதி - ராத்திரி என்று துக்காதிகளை நீக்கி சுகத்தை அளிக்கின்ற இரவு சிவராத்திரி.

மஹா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் சிவ ஆராதனை செய்து சிவனை வழிபட வேண்டும். நிரம்பிய அன்புடன் சிவபுராணம், பஞ்சாட்ரப்பதிகம் போன்ற தேவாராதிகளை ஓத வேண்டும்.

"எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்க்கு அரிய செயல்." - *(திருக்குறள்)*

"பெறுவதற்கு அரியகாலம் வந்தால் அதைப் பயன்படுத்திக் கொண்டு செய்வதற்கு அருமையான செயல்களை அப்போதே செய்ய வேண்டும்."

முதல் காலம் தேவ காலம், இரண்டாவது காலம் கௌரி காலம், மூன்றாவது காலம் இலிங்கோத்பவ காலம், நான்காவது காலம் பக்த காலம் எனப்படும். மூன்றாவது காலமான இலிங்கோத்பவ காலமானது பிரம்மனும், திருமாலும் நான்பிரமம் நான்பிரமம் என்று தர்க்கமிட்டு போர்புரிந்த சமயம் அவர்கள் இடையே அடி, முடி காண மாட்டாமல் சோதிமயமாய் நின்றார் சிவபெருமான், அப்படி தோன்றிய நாள் தான் சிவராத்திரி. பிரம்மனும், தேவர்களும் துதிக்க அவர்கள் முன்னாள் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் திருவருள் புரிந்தார் சிவபெருமான். காலம் என்பது கடவுளுக்கு அடுத்தது. காலத்தில் செய்வதற்கு அதிக பலன் உண்டு.

அடிமுடி காண்பார் அயன் மால் இருவர்
படிகண் டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன் என்று அச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்று அயன் பொய் மொழிந்தானே! - *திருமந்திரம்*

காலத்திற் செய்கின்ற கருமங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி நன்மை செய்யும். பருவத்தே பயிர் செய் என்பது பழமொழி. ஆதலால் புண்ணிய விரத நாட்களில் செய்கின்ற தானத்திற்கும், ஜெபத்திற்கும் நிரம்பிய பலன் உண்டு. விரதம் இருந்து பெருமானை வழிபடுவது நம் நாட்டில் தொன்று தொட்டுவந்த பழக்கம். சிவராத்திரியன்று விரதமிருந்து சிவனை வழிபடுவதால் இகபர சுகங்களை எளிதில் பெற முடியும்.

பக்தப் பெருமக்கள் அனைவரும் இவ்விழாக் காலங்களில் வருகை தந்து எல்லாம் வல்ல இலண்டன் சிவகாமசுந்தரி உடனுறை சிதம்பரேஸ்வரர் பெருமான் மற்றும் மரகதலிங்கேஸ்வர பெருமானுடைய பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.


Thanalakshme
Jewellers
தனலக்ஷ்மி ஜூவலர்ஸ்
வைர தாலிக்கொடி முதல்
மங்கையர் மனம் கவர்ந்த
தங்க நகைகளுக்கு
82 High Street
Barkingside
Essex IG6 2DJ
Tel: 020 8551 1153


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com
www.veenas.com

# சைவ முன்னேற்றச்
# இப்பணிகளுக்கு

## GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
## LONDON - UK
















# சங்கப் பணிகள்
# நன்கொடை வழங்கியோர்

## சைவமுன்னேற்றச் சங்க முதியோர் நிலையம்










மருத்துவநிலைய உபகரணங்கள்



தொல்புரம் முதியோர் மண்டபம்

# Satash Community Care



**Orchid Bungalow**
51 Mollands Lane, South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane, South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Mollands Lane, South Ockendon RM15 6DJ
Adult Services 01708 856592


**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN • ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139


your choice is CLEAR!
invisalign
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is an Invisalign® Platinum Elite Provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the
Bluebell
dental practice & clinic
Making a Difference
CHIGWELL
020 8500 6789
STRATFORD
020 8555 1144
www.bluebelldp.co.uk
You Tube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஜனவரி (15–01-2016) தொடக்கம் ஏப்பிரல்(30-04-2016) வரை**

| | | |
|---|---|---|
| 15.01.2016 | வெள்ளி | தைப்பொங்கல் |
| 24.01.2016 | ஞாயிறு | தைப்பூசம் |
| 31.01.2016 | ஞாயிறு | ஏகாதசருத்ர ஜபமும் ஹோமமும் |
| 07.03.2016 | திங்கள் | சிவராத்திரி |
| 19.03.2016 | சனி | யோகர்சுவாமிகள் குருபூசை |
| 22-03-2016 | செவ்வாய் | பங்குனி உத்தரம் |
| 26.03.2016 | சனி | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 13.04.2016 | புதன் | துன்முகி வருடப்பிறப்பு |
| 21.04.2016 | வியாழன் | சித்திராபௌர்ணமி |
| 30.04.2016 | சனி | நடேசர் அபிஷேகம் |

விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி......

- திருமதி சுகந்தி இந்துசேகரன்

ஆன்மிக இதழ் ஒன்றிற்கு ஒரு கட்டுரை எழுதவேண்டும் என்பது எனது விருப்பம். ஆனால் எதைப்பற்றி எழுதுவதென்று என்னால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. இப்படியான மனக்குழப்பத்தில் இருந்த எனக்கு, "சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி" என்ற தலைப்பை எடுத்து அதை அலசி ஆராய்வது நன்றாக இருக்கும் என்ற நல்லெண்ணத்தை என் சிந்தையில் உருவாக்கிய பரம்பொருளை முதற்கண் வணங்கி இக்கட்டுரையைத் தொடங்குகிறேன்.

ஔவையார், தானும் கயிலாசத்திற்குப் போகவேண்டும் என்று விருப்பங்கொண்டு விநாயகப் பெருமானை நினைத்துப் பூசை செய்யும்பொழுது, விநாயகர் அகவலைத் தோத்திரமாகப் பாடினார் என்பது வரலாறு. அதிற் பாடப்பட்டுள்ள "சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி" என்ற ஒரு வரியை மட்டும் எடுத்து, அதிலே பொதிந்துள்ள கருத்துக்களை வேறொரு கோணத்தில், எனது சிற்றறிவுக்கும், சிந்தனைக்கும் ஏற்றவாறு என் மனதில் தோன்றிய உணர்வுகளை, வாசகர்களாகிய உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

"சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி" என்னும் வரியில் ஔவை மிக நுணுக்கமான ஆழமான கருத்துக்ளைச் சொல்லியிருக்கலாம் என்பது எனது கருத்து. ஆனால் இக்கட்டுரையில், சித்தம் என்றால் மனம் என்றும், சிவலிங்கம் என்பது - பொதுவாக இறைவனைக் குறிப்பிடும் சொல் எனவும் பொருள் கொண்டு அதன் அடிப்படையில், சிறுவர்களின் மனநிலையைப் பற்றி சிந்திக்கிறேன். அதாவது சிறுவர்களின் மனதில் எவ்வாறு இறை சிந்தனையை உருவாக்குவது, அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும், அதற்கு எவ்வாறான வழிவகைகளைக் கையாள வேண்டும் என்பதைப்பற்றி இப்போது பார்ப்போம்.

சிறுவர்களின் மனதில் பொதுவாகப் பல்வேறான எண்ணங்கள் தோன்றி மறையும். அது இயற்கை. ஆனால் இறையுணர்வு என்பது தானாகவே தோன்றுவது மிகவும் அரிது. எனவே பெற்றோர்களாகிய நாமே அதை உருவாக்க வேண்டும். தெய்வசிந்தனையை உருவாக்குவது கடினமாக இருந்தாலும், ஒரு முறை அவர்களின் மனதில் பதியும்படி புகுத்திவிட்டால் அது என்றுமே அழியாது. "பசு மரத்து ஆணி போல" நிலையாகப் பதிந்துவிடும். இதற்குப் பெற்றோர்கள்தான் முழுமுயற்சி எடுக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது வீடுகளிலே, சிறுவர்கள் தினமும் திருமுறைகள் பாராயணம் செய்வதும், பஜனைகளில் பங்குபற்றுவதும், காலையும் மாலையும் இறைவனை வணங்குவதும் போன்ற நல்ல பழக்கவழக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். சமய சம்பந்தமான பேச்சுக்கள், ஆன்மிக நிகழ்ச்சிகள் போன்றவற்றைத் தொலைக்காட்சியில் பார்ப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

நாம் ஒரு முயற்சியை எடுத்து அது வெற்றிகரமாக முடிவடைகிறது அல்லது தோல்வியாகிறது என்றால், அதற்கெல்லாம் காரணம் நம்மை இயங்க வைக்கிறதாகிய நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே. அதுதான் இறைவன் என்பதனை அவர்கள் அநுபவரீதியாக உணரும்படி செய்ய

வேண்டும்.. எமக்குத் தூக்கம் வருகின்றது. அதை உண்டாக்குவதும் ஒரு சக்தியே. அதுபோன்று இயற்கையாக நடப்பவற்றை அநுபவரீதியாக எடுத்துக்கூறி, சிறுவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

சில சிறுவர்கள் பரீட்சை எழுதச்செல்லும்போது கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிச் செல்வார்கள். அப்படிச் செய்தால் தங்களின் முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. தங்களின் முழுமுயற்சிக்கு கடவுளின் திருவருள் துணை இருக்கும் என்பதும், தமக்கு கிடைக்கும் வெற்றிக்கும் இறைவனையே முதன்மைப்படுத்துகின்ற நல்ல பழக்கத்தைச் சிறுவர்கள் மனதில் உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் வேறுபாடான மனோநிலையை உடையவர்கள். பெற்றோர்களாகிய நாம் அவர்களின் மனநிலையை அறிந்து அதற்குத் தகுந்தவாறு நடந்து அவர்களின் வழியி லேயே சென்று இலகுவாக எதையும் சாதித்து விடலாம். குழந்தைகளின் மனம் மென்மையான மலர் போன்றது. மலரானது செடியில் இருக்கும்போது அதற்கு எந்தவித மதிப்பும் கிடையாது. அது வெறும் பூ மட்டுமே. ஆனால் அதை செடியிலிருந்து பறித்து அழகிய மாலையாக மாற்றி இறைவனுக்குச் சாத்தும் பொழுது, அது மேன்மையடைகிறது; உயர்வாக மதிக்கப்படுகிறது.

அதுபோலவேதான் குழந்தைகளின் மனமும் செடியிலுள்ள மலர் போன்றது. அதை அன்பெனும் கரத்தினால் பற்றி அரவணைத்து அறிவுரை என்னும் நாரினால் மாலையாகத் தொடுத்து சமுதாயத்தில் மாலையாகப் புனைந்து அணியும்போது அவர்கள் உயர்வாக மதிக்கப்படுவார்கள். இதனால் அவர்கள் முழுமையடைகிறார்கள்.

“மனமெனுந் தோணி பற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடல் லோடும்போதும்
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துணையுறு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடையகோவே”

என்கிறரர் திருநாவுக்கரசர்.
இறக்கும்போதும் இறையுணர்வும் சமயஅறிவும் இல்லையே என்று கவலைப்படாமல் இப்போதே அவனை வழிபடுவோம் என்று நாவுக்கரசர் அழைக்கிறார்.

சிறுவர்களின் மனதில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல எதையும் இலகுவாகப் புகுத்தி விடலாம். எனவே இந்த நல்ல வழியைக் குழந்தைகளின் சித்தத்தில் ஏற்றிவைக்க முயல்வோமாக.

## நல்லது

கருணை உள்ளம், வீர உணர்ச்சி, சங்கீத ஞானம், கல்வித் திறமை இவை நான்கும் பிறக்கும்போதே அமையுங் குணங்களாகும். வைரம் வைரந்தான். கண்ணாடி கண்ணாடி தான். ஒரு கண்ணாடிச் சில் சாணைக் கல்லினால் பட்டை பிடிக்கப்பட்டாலும், வைரத்தின் விலை மதிப்புப் பெறமுடியாது.
அரசனாக இருப்பன் சக்கரவர்த்தியாக ஆசைப்படுகிறான். தேவனாகப் பிறந்தவன் தேவேந்திரனாக ஆசைப்படுகிறான். கட்டைகளால் அக்னி திருப்தியடைவதில்லை. தாகங் கொண்டவன் விடாய் தணிவதில்லை. ஆகவே ஒருவன் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையவேண்டும்.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

# Thirukkural in praise of God

By Ponniah Parirasa

Thirukkural begins with the chapter "In Praise of God" and devotes its first ten couplets to the subject. The rest of the 1330 couplets are about man and his manner of living on this earth.

The praise pre-supposes a belief in God. The belief is not of the kind that comes by habit or from a conceptual understanding of God. It is something more definite and convincing, with the certainty beyond all doubts, such as a belief that is had after an experience.

God cannot be experienced empirically or rationally. It calls for a sense that transcends the physical and mental sources of knowledge. It is found in a sense of profound insight that is given, and which comes effortlessly to a man with a disciplined mind, endowed with sovereign morality.

The Kural identifies this person as a man of 'thavam'. He is one who has cast away the egoism of 'I' and 'mine' and become selfless (268 and 346).

His 'thavam'(penance) lies in "doing his duties by the world"(266) and " causing no hurt to any life; and himself bearing his sufferings with serenity."(261)

His self is reconstituted and becomes a kind of universal self that is in all people. He acquires a lucid and non-cognitive (intuitive) grasp of all things coming within his purview. He sees them directly as they are. "He sees the reality behind all appearances,"(355) and recognizes a higher intelligence in all his experiences (2). They are as obvious and real to his being as the "letter A to the Tamil alphabets"(1). This power of insight is a natural acquisition of his state of selflessness. He has achieved Self-Realization and is on the threshold of God-Realization. Devotion to (praise of) God completes the process.

In the chapter 'In Praise of God', God is invoked not by any name or by any description of his form but by His attributes. It is a reminder to man to become godly he must behave in godly ways. Acquire the attributes that belong to God and the distance between you and God narrows and 'He takes abode in the lotus of your heart.'(3) Like his neutrality (4), be fair and impartial and "beyond all likes and dislikes" in your dealings with fellow humans.
Like his serenity (6), be unaffected by all influences of outside forces on your feelings and temperament. Like his unique Godhead (7 - தனக்குவமை இல்லாதான்) seek your own true self and realise your unique self. Do all these and you are in communion with God.
These attributes of God have a bearing on the ideal that Kural has placed before man to be followed by him as he moves through the various stages of his life as husband, father, relative, friend, neighbour and fellow human being. "Be just and fair in mind and virtuous in actions as you lead a life fruitful for all"(994). It is a life of prayer. Self-Realisation and God-Realisation are almost interchangeable states. One cannot be without the other. Each

reinforces the other. "Get attached to him who is without attachments. Hold on to that attachment in order to free yourself from attachments." (350).

The benefits of devotion to God are reaped in this very life on earth - a long life (3 and 6 above) that is free from physical sufferings (4 above) and mental worries (7) and a life that is assured of a smooth sailing over the troubled water of the sea of birth.(10)

For Thiruvalluvar, the kingdom of God is to be found on this very earth itself. "He, who lives on this earth in the way he ought to live, will be counted with the dwellers of heaven"(50).

**(The Thirukurals reffered to in the above article are given below)**

Kural 1:

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. - As all letters have the letter A as their first, so the world has the eternal God for its first]

Kural 2:

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? - What is the use of all your learning, if you can't surrender yourself at the feet of God]

Kural 3:

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார் -Those who surrender themselves at feet of the one, who resides in the flower-like hearts of all, will live long and well]

Kural 4:

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களுக்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை. -Those who surrender at the feet of the one, who doesn't have wants or hates, will never have any hassles anywhere.

Kural 6:

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

ஐம்பொறிகள் வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்வர் -Those who follow the true moral path of the one, who has doused the desires of the five senses, will live long.

Kural 7:

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.-**

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.- Of mind cannot be removed, except from those who are united to the feet of Him who is incomparable.

Kural 10:

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது. - Those who surrender at the feet of God, will cross the great ocean of life; others won't

Kural 50:

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான் - One who lives worldly life the way it ought to be lived will be treated on par with the God inhabiting the heavens

Kural 261:

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் உரு**

தான் பெற்ற துன்பத்தைப் பொறுத்தலும் மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகியவைகளே தவத்திற்கு வடிவமாகும்- -To endure any ordeal and to cause none to other lives, embodies penance.

Kural: 266:

**தவம்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு**

தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவர். அவர் அல்லாத மற்றவர்

ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே- Those who do penance do their duty; others, engage in futile tasks, ensnared in desire.

Kural 268:

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாம் தொழும்.**

தவவலிமையால் தன்னுயிர் தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை உயிர்களெல்லாம் அவனுடைய பெருமைகளை உணர்ந்து தொழும் - One, who has given up the thought of 'I and myself', will be hailed by all.

Kural 346:

**யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்**

.உடம்பை யான் எனக்கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக்கருதலுமாகிய மயக்கத்தைப் போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை அடைவான். - One who severs the vanity of 'I' and 'Mine',shall reach some place better than paradise

Kural 350:

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும். உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும் - Be attached to the One, who is attached to none. Be so attached to be free of any attachments

Kural 355:

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும் - It doesn't matter what anything seems to be, wisdom lies in seeking to grasp its true nature

Kural 994:

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டும் உலகு**

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர் - The world applauds the character of those whose usefulness results from their equity and charity

# ஆன்மா

## (நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அருளிய பாலபாடம் புத்தகத்திலிருந்து)

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தை உடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவிப்பவைகளாய்ச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய் தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், எண்பத்திநான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும்.

**நால்வகைத் தோற்றங்களாவன:** அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள் அண்டசம் முட்டையிற் தோன்றுவன. சுவேதசம் வேர்வையிற் தோன்றுவன. உற்பிச்சம் வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் தோன்றுவன.
**எழுவகைப் பிறப்புகளாவன:** தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்றது. மரம், செடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினுள், வேர். கொம்பு, கொடி, கிழங்குகளினும் தாவரங்கள் பிறக்கும். தாவரமென்றாலும், நிலையியற் பொருளென்றாலும் அசரமென்றாலும் பொருந்தும். தாவரமல்லாத மற்றை ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கமமென்றாலும், இயங்கியற் பொருளென்றாலும், சரமென்றாலும் பொருந்தும்.

தேவர்கள் பதினொரு நூறாயிர யோனிபேதம், மனிதர்கள் ஒன்பது நூறாயிர யோனிபேதம், நாற்கால் விலங்குகள் பத்து நூறாயிர யோனிபேதம், பறவைகள பத்து நூறாயிர யோனிபேதம், நீர்வாழ்வன பத்து நூறாயிர யோனிபேதம், ஊர்வன பதினைந்து நூறாயிர யோனிபேதம். தாவரம் பத்தொன்பது நூறாயிர யோனிபேதம் ஆகத் தொகை எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதம்.

ஆன்மாக்கள், தாம் எடுத்த சரீரத்திற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி களினாலும், சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறி வுயிர், நாலறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும், மரமும் முத லியவை (ஸ்)பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். சிப்பியும், சங்கும் முதலியவை அதனோடு இரத(ச)த்தை அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியவை அம்மூன்றினோடு உருவத்தை அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும் பறவையும் அந்நான்கினோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தோடு சித்தத்தினாலறியும் அறி வுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள், தாம் பூமியிலே செய்த நல்வினை, தீவினை யென்னும் இருவகை

வினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவியையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும் அநுபவிக்கும். அப்படி அநுபவித்துத் தொலைத்தும் தொலையாமல் எஞ்சி நின்ற இருவினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து அவைகளின் பயன்களாகிய இன்பம், துன்பம் இரண்டையும் அநுபவிக்கும். இப்படியே தமக்கு ஒரு நிலைமையில்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல, கடவுளுடைய ஆக்ஞையினாலே, கருமத்துக்கு ஈடாக, மேலே உள்ள சுவர்க்கத்திலும், கீழேயுள்ள நரகத்திலும் நடுவே உள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்து இறந்து உழலும் ஆன்மாக்கள் தாவரயோனி முதலிய கீழுள்ள யோனிகள் எல்லாவற்றிலும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணியமேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகவும் அருமையாம். அவ்வருமை ஆராயும் காலத்து, கடலைக் கையினாலே நீந்திக் கரை யேறுதல்போலும். இத் தன்மையுடைய மனிதப் பிறப்பை எடுப்பினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையான மனிதப்பிறப்பை உண்டாக்கியது, உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்கு காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும் பத்து மாதத்திற் பிறந்தவுடனேயே அழியினும் அழியும். பிறந்த பின் சிலகாலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசிற்குமேல் பதினாறு வயசு வரையிலுள்ள பாலாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயது வரையுள்ள தருணாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையில் அழியினும் அழியும். எப்படியும் இந்தச சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாம். அழியும் காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாதே, ஆதலால், இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்.

## நடுப்பக்கப் படங்கள்

Goshin Isshin-Ryu Karate Association (U.K) உரிமையாளர் திரு. மு.ராமதாஸ் அவர்களின் நிதிப் பங்களிப்பின் உதவியுடன் சைவமுன்னேற்றச்சங்கம் கீழ்கண்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கு தேவையான நூல்களை அன்பளிப்பு செய்தது. அவற்றை வடமராட்சி கிழக்கு உதவிப்பிரதேசச் செயலாளர் திரு. மு. கனகேஸ்வரன் அவர்கள் பாடசாலைகளுக்கு வழங்குவதைக் காணலாம்.

1.உடுத்துறை மகாவித்தியாலயம் 2. ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம் 3.செம்பியன்பற்று அர சினர் தமிழ்க்கலவன் பாடசாலை 4. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்

Enlightenment Circle



எல்லா வயதினருக்கும் யோகாசன வகுப்புக்கள் இங்கே நடைபெறுகின்றன.

Yoga lessons are held here for all age groups

Contact our team on : 07830 374780 / 07730 313379.

# சைவ சமயம்

செல்வி தேநுகா சிவநேசராஜா

**(12-12-2015 அன்று இலண்டன் சைவமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சைவசமயப் பரீட்சையில், பிரிவு நான்கில் பங்குபற்றிய ஒரு மாணவியின் கட்டுரை)**

எமது சமயம் சைவசமயம். "சைவத்தின் மேற் சமயம்வேறில்லை". எமது சமயத்தின் சிறப்பு எங்களுக்குத் தெரியவேண்டும். எமது முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவபெருமானைச் சிவன், பரமேஸ்வரன், திருநீலக்ண்டன், நடராஜர் எனவும் அழைக்கலாம். இவருடைய சக்தி உமா தேவியார். சிவன் பாதி, சக்தி பாதியாக இருக்கும் உருவத்தை அர்த்தநாரீஸ்வரர் என அழைக் கிறோம். இவர்களுக்கு நான்கு திருக்குமாரர்கள். பிள்ளையார், முருகன், வயிரவர், வீரபத்திரர் ஆவர். சிவபெருமானின் வாகனத்தை விடை என்று அழைப்பர். திருஞானசம்பந்தர் தனது மூன்று வயதிலே சிவபெருமானைப்பற்றிப் பாடும்போது, "தோடுடைய செவியன் **விடை**யேறியோர்" என்று, சிவபெருமான் எருதுவாகனத்தில் இருப்பதைப் பற்றி மிக அழகாகப் பாடியவர். பிள்ளையாரின் வாகனம் எலி. இதை மூஷிகம் என்றுகூடச் சொல்கிறோம். முருகனின் வாகனம் மயில். வயிரவரின் வாகனம் நாய்.

எமது சமயத்திலே பல கடவுள்கள் உண்டு. அவற்றிற் சில:- அம்மன், வெங்கடேஸ்வரர், ஐயப்பன், தட்சணாமூர்த்தி என உள்ளனர். இவர்களை நாங்கள் கோயில்களிலும் வீட்டிலும் வணங்கலாம். ஆலயத்திற்கு நாம் எப்படிச் செல்லவேண்டும் என்றால், குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து, பழங்கள், பூக்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய் போன்றவற்றை எடுத்துச் செல்லவேண்டும். நாங்கள் ஆலயத்தை அடைந்தபின், முதலிலே பிள்ளையாரை வணங்க வேண்டும். பின்பு மற்றக் கடவுள்களை வணங்கி, பின் சரியைத் தொண்டுகள் செய்யவேண்டும். சரியைத் தொண்டுகள் ஆவன: பூமாலை கட்டுதல், ஆலயத்தைச் சுத்தம் செய்தல், அர்ச்சனைப் பொருள்களைக் கொடுத்து உதவுதல் போன்ற தொண்டுகள். ஆலயத்திற்குச் சென்றால், திருநீறு அணியவேண்டும். திருநீற்றை இரண்டு வகையாக அணியலாம். ஒன்று, உத்தூளனமாக அணிவது அதாவது பரவிப் பூசுதல். இரண்டாவது கைவிரல் மூன்றினாலும் திரிபுண்டரமாக அணிவது. திருநீற்றை நீரிலே குழைத்து, வலக்கையின் மூன்று விரல்களினாலும் திருபுடப் பூசுதல். திருநீற்றை நிலத்திற் சிந்தாமல், "சிவ சிவ" என்று சொல்லித் தரித்தல் வேண்டும். திருநீற்றின் மகிமையைத் திருமூலதேவநாயனார் " கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை" என்னும் பாடலினூடாகப் பாடியுள்ளார்.

எமது சைவ சமயத்தைப்பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. உதாரணம். திருக்குறள் ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்கிறது, பெரியபுராணம் அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய வரலாற்றைக் கூறுகிறது. திருவள்ளுவர் கூறியதுபோல்,

" கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

நாம் கற்க வேண்டிய நூல்களைப் பிழையறக் கற்கவேண்டும். பின்பு அதன்படி நடக்க வேண்டும்.

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

# கோச்செங்கட்சோழ நாயனார்

சோழநாட்டில் சிபிச்சக்கரவர்த்தி என்னும் மன்னர் ஒருவர் இருந்தார். அவர் தம்மிடம் அடைக்கலம் புகுந்த ஒரு புறாவின் எடைக்குச் சமமாகத் துலாத்தட்டில் தனது உடல் தசையை நிறுத்துக் கொடுத்த பெருமை வாய்ந்தவர். அவரது மரபில் வரும் சோழர்களுக்கு உரிமையாகிய சோழநாட்டிலே காவிரி நதியானது, தனது அலங்காரங்களினால் முத்துக்கள், அகிற்கட்டைகள், பலவகை மணிகள் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொழிக்கும். அத்தகைய காவிரிக் கரையில் சந்திரதீர்த்தம் என்றொரு பொய்கை உண்டு. அந்தக் காட்டில் ஒரு வெண்நாவல் மரத்தின் கீழே சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டது. அதைப் பெருந்தவம் படைத்த ஒரு வெள்ளை யானை கண்டது. உடனே அது தன் துதிக்கையினால் நீரை முகர்ந்து வந்து, அந்த சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டி, மணம் கமழும் பூங்கொத்துக்களைச் சாத்தி நாள்தோறும் வழிபட்டு வந்தது. இவ்வாறு யானையால் வழிபாடு செய்யப்பட்டு வந்ததால் அந்த இடத்திற்கு திருவானைக்கா என்னும் பெயர் வழங்கலாயிற்று.

அங்கே ஞானமுள்ள ஒரு சிலந்தியும் இருந்தது. திருவானைக்காவில் வீற்றிருக்கும் சிவ லிங்கத்தின் திருமுடியின்மேல் சூரிய வெப்பமும், மரக்கிளைகளின் சருகுகளும் படாமலிருப்பதற்காக அந்தச் சிலந்திப்பூச்சி தன்னுடைய வாயின் நூலினாலே சிவ லிங்கத்திற்கு மேலே கூரை போல் நூல் வலைப்பந்தலைக் கட்டி விரித்து ஒரு விதானம் அமைத்தது.

வழமைபோல் இறைவனது திருமுடியை வணங்கச் சென்ற வெள்ளை யானையானது, சிவலிங்கத்தின் மேலே சிலந்திவலை ஒன்று இருப்பதைக் கண்டு, “இது அநுசிதம் (தூய்மையற்றது)” என்று கருதி அந்த வலை விதானத்தைச் சிதைத்தது. அதைக் கண்ட சிலந்தி “யானையின் துதிக்கை சுழன்றதால் தான் அமைத்த நூற்பந்தல் சிதைந்து” என்றெண்ணி, மறுநாள் மீண்டும் புதிய வலையை இழைத்தது. அன்றும் அந்த வெள்ளையானை அந்த வலை விதானத்தை அழித்தது. அதைக் கண்ட சிலந்தி, “எமது சிவபெருமான் திருமுடிமேல் சருகுகள் விழாமலிருப்பதற்காக நாம் வருந்தி இழைத்த நூலிழைப் பந்தலை இந்த யானை அழிப்பதோ?” என்று கோபித்து எழுந்து, யானையின் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்தது. அந்த வேதனையைத் தாங்க முடியாத வெள்ளையானை தன்னுடைய துதிக்கையைத் தரையில் வேகமாக மோதி அடித்து நிலைகுலைந்து வீழ்ந்து இறந்தது.

அதன் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்த சிலந்தியும், யானை துதிக்கையை நிலத்திலே மோதியடித்ததால் அதுவும் அப்போதே இறந்தது. சிவபெருமான் அருள் தரும் முறையின்படி, வெள்ளையானைக்கு ஏற்ற நற்பதத்தை அளித்து, சிலந்தியைச் சோழர் குலத்தில் வந்துதித்து, உலகம் காத்து, சிவதொண்டு புரிந்து, பின்னர் வீடுபேறு பெறும்படி அருள் புரிந்தார்.

அந்தக் காலத்தில், சோழ மன்னனாகிய சுப தேவன் என்பவன் தன்னுடைய பெருந்தேவி யான கமலவல்லியுடன் சிதம்பரத்தை அடைந்தான். பொன்னம்பலத்தில் திருக்கூத்து ஆடும் சிவபெருமானைத் தன் மனைவியோடு வழிபட்டுக் கொண்டிருந்தான். அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாமையால் அரசமகா தேவியான கமலவல்லி சிவபெருமானிடம் பிள்ளைவரம் வேண்டி நின்றாள்.

அம்பலவாணர், அவளுக்கு இரங்கித் தமக்குப் பெரும் திருப்பணி செய்த சிலந்தியைச் கமலவல்லியின் திருவயிற்றில் அழகியதோர் ஆண்மகவாக வந்தடையும்படி செய்தார்.

கமலவல்லிக்குக் கர்ப்பகாலம் நிரம்பிப் பிரசவவேதனை நெருங்கியது. அப்போது காலக்கணிதர்களாகிய சோதிடர்கள், "இப்பிள்ளை இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமானால் மூவுல கங்களையும் அரசு புரியும்" என்று கூறினார்கள். அதைக் கேட்டும் கமலவல்லி, "ஒரு நாழிகை கழித்து என் பிள்ளை பிறக்கும்படி எனது கால்களைக் கட்டித் தலை கீழாகத் தூக்கி நிறுத்துங்கள் என்று கட்டளையிட்டாள்". அவர்களும் அவ்வாறே அரசமகாதேவியைத் தலை கீழாக கட்டித் தூக்கினார்கள். சோதிடர்கள் குறித்த அக்கால எல்லை நெருங்கியதும் கட்டவிழ்த்து விட்டார்கள். கமலவல்லி அரியதோர் அழகிய ஆண்மகவைப் பெற்றுக் கையிலெடுத்தாள். அக்குழந்தை காலந்தாழ்ந்து பிறந்தமையால், சிவந்த கண் களையுடையதாயிருந்தது. அதைக் கண்டதும் கமலவல்லி, ஆ! எனக்குப் பிறந்த எனது கோச்செங்கண்ணானோ?" என்று கூவியவாறு மயங்கி விழுந்து இறந்துவிட்டாள். செங்கட் சோழனான சுபதேவன், தன் அருமை மகனை அருமையாக வளர்த்து, உரிய பருவத்தில் அம்மகனுக்கு முடிசூட்டிவிட்டு பெரிய தவநெறியை அடைந்து, பின்னர் இறைவரது சிவலோகத்தைச் சேர்ந்தான்.



அநபாய சோழ மன்னரது முந்தையோராக வரும் குலமுதல்வராகிய கோச்செங்கட்சோழர் சிவபெருமான் திருவருளினாலே தம் முற்பிறப்பின் நிலையை அறியும் உணர்வுடனே பிறந்தவராவார். அவர் அவ்வுணர்வுடனேயே உலக ஆட்சிபுரிந்து சிறந்து விளங்கினார். அவர் பேரன்போடு சிவபெருமானுக்குப் பெரிய திருக்கோயில்கள் பலவற்றைக் கட்டியெழுப்பும் திருத்தொண்டைத் தமது திருப்பணியாக கொண்டார். தாம் முற்பிறவியில் சிலந்தியாக விருந்து திருவானைக்காவில் திருவருள் பெற்றதை உணர்ந்து அங்கு சென்று மெய்ஞ்ஞானத்தின் சார்புள்ள வெண்நாவல் மரத்தினுடனே சிவபெருமானுக்கு அரிய திருக்கோயில் ஒன்றைக் கட்டியமைத்தார். தனது அமைச்சர்களை ஏவியனுப்பிச் சோழநாட்டில் பல ஊர்கள்தோறும் சிவ பெருமானுக்கு அழகு நிறைந்த "மாடக்கோயில்கள்" பலவற்றையும் கட்டயெழுப்பினார். அத்திருக் கோயில்கள் தோறும் இறை வருக்குத் திருவமுதிற்குரிய படித்தரம் முதலான பெரும் செல்வங்களைத் தம் விருப்பத் தோடு மிகவும் பெருக அமைத்தார்.

எத்திசைகளிலும் தமது புகழ் விளங்கச் செங்கோல் ஆணை செலுத்திய கோச்செங்கட்சோழர் திருத்தில்லைப்பதியை நினைத்து, முற்படச் சென்று அந்நகரை அடைந்து, சைவ மெய்த் திருவேமிக்க பொன்னம்பலத்தில் திருநடனம் செய்தருளும் பெருமானை அடிவணங்கிப் பேரன்பு மேன்மேலோங்க உள்ளம் உருகி மகிழ்ச்சியடையத் தொழுது துதித்தார். அங்கு அவர் தங்கி வாழ்ந்து வரும் நாளிலே தில்லைவாழ் அந்தணர்களுக்கு உறையுளாகப் பல மாடமாமாளிகைள் எடுப்பித்தார்.

இவ்வாறு பற்பல திருத்தொண்டுகள் புரிந்த "கோச்செங்கட் சோழராகிய செங்கண்ணனார்" உலகம் தமது வெண்கொற்றக்குடை நிழலிலே விளங்க தன்னாட்சி பல்லாண்டு புரிந்து, நல்ல சிவத்தொண்டுகளைச் செய்து வாழ்ந்து பின்னர், தேவர்கள் வந்து வணங்கும்படி திருத்தில்லைக் கூத்ததரது திருவடி நிழலை அடைந்தார்.

**"தென்னவனாய் உலகாண்ட**
**செங்கணார்க்கு அடியேன்"**
**-சுந்தரர்**

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

கந்தசட்டி விரதத்தின் கடைசி நாள்(ஆறாவது நாள்) சூரன்போர். கண்ணனும் தாத்தாவும் சூரன் போர் பார்க்கச் சென்றிருந்தனர். மாலை ஆறு மணி, நவம்பர் மாதம். இலண்டனில் பனி பொழியும் காலம். பூகோளம் சூடாகி வருகிறதென்ற விஞ்ஞானிகள் கூற்றுப்படி (சொல்வதுபோல) பனிபெய்வதற்குப் பதிலாக மழை தூறிக்கொண்டிருந்தது.. ஆனாலும் கோயிலில் முன்பு அறிவித்திருந்தபடி முருகப்பெருமான் சூரனுடன் போர்புரிவதற்கு ஆயத்தமாகிக் கோயிலின் வெளிவாசலுக்கு வருகிறார். இளைஞர்களும் சூரனைக் காவியபடி வேகமாக வருகின்றனர். முருகனுக்கும் சூரனுக்கும் இடையே கடும் போர் நடக்கிறது. சூரனின் தலையை முருகனின் அம்பு வீழ்த்தியதும் சூரன் யானைத் தலையுடன் வருகிறான். சூரன் போரை மிக ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த கண்ணனுக்கு இப்போது குழப்பமாகிவிட்டது. யானை முகத்துடன் வரும் சூரனைப் பார்த்ததும் கண்ணனுக்கு பிளளையாரின் ஞாபகம் வந்து விட்டது!.

கண்ணன்: என்ன தாத்தா! பிள்ளையார் தனது தம்பி முருகனுடன் சண்டைக்கு வருகிறாரோ?

தாத்த: (தாத்தாவுக்கு சிரிப்பு வருகிறது). இல்லையடா கண்ணா! சூரன்தான் யானைத் தலையுடன் வருகிறான்.

கண்ணன்: அது எப்படி முடியும் தாத்தா?

தாத்தா: சூரன் சிவபக்தியுள்ளவனாயிருந்தான். சிவனை நினைத்து தவம் செய்து, தன்னை எவரும் வெல்லக்கூடாது என்றும் கொல்லக்கூடாது என்றும் வரம் வேண்டியிருந்தான். அதனால் அவனை எவராலுமே கொல்ல முடியாது.

கண்ணன்: அதனால்தான் அவன் இப்போது யானைத்தலையுடன் வருகிறானா?

தாத்தா: ஆமாம் கண்ணா! இப்போ பார், யானைத்தலை விழுகிறது. இனிச் சிங்கத்தலையுடன் வருவான். கடைசியாக மாமரமாக வருவான்.

கண்ணன்: ஓ! ஆது நினைவிருக்கிறது தாத்தா! ஆனால் மாமரத்தை முருகன் அம்பினால் பிளக்க அதன் ஒரு பாதி சேவலாகவும் மறுபாதி மயிலாகவும் வருமென்று கொஞ்ச நாள்களுக்கு முன்பு சொல்லித்தந்தீர்களே! ஆனால் சிங்கத்

தலையுடனும் யானைத் தலையுடனும் வருவான் என்று சொல்லவேயில்லையே தாத்தா!

தாத்தா: அதுதான் இன்றைக்கு உன்னைக் கோயிலுக்கு கூட்டிவந்திருக்கிறேன் நேரில் பார்த்தால் எப்பவுமே மறக்க முடியாதல்லவா!

கண்ணன்: ஆமாம் தாத்தா! இதோ இப்போது மாமரமாகச் சூரன் வருகிறான். மாங்காய்கள் கூட மரத்தில் தொங்குகிறதே தாத்தா! பார்க்க நல்ல அழகாக இருக்கிறது தாத்தா!

தாத்தா: குருக்கள்மார் நன்றாக ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.
(மாமரம் முருகன் ஏவிய அம்பினால் பிளவுபட, சூரன் சேவலும் மயிலுமாகி வந்து முருகனை வழிபட, சூரன் போர் இனிது முடிவடைகிறது. முருகப் பெருமான் வெற்றியுடன் கோயிலுக்கு திரும்புகிறார் அர்ச்சகர் தீபாராதனை செய்கிறார். பக்தர்கள் பஜனைகள் பாடி இறைவனைப் போற்றித்தொழுகின்றனர். கண்ணனும் தாத்தாவும் முருகனை வணங்கிவிட்டு வீடுதிரும்புகின்றனர்.)

கண்ணன்: கந்தபுராணக் கதையை எனக்குச் சொல்லுங்கோ தாத்தா!

தாத்தா: கந்தபுராணம் ஒரு பெரிய கதை. சுந்தசட்டி விரதகாலங்களில் மாலை வேளையில் கோயில்களில் தொடர்ந்து சிலர் பிரசங்கம்(சொற்பொழிவு) செய்வர். சிலர் பாடல்களை வாசிப்பார்கள்.

கண்ணன்: பாடல்கள் எல்லோருக்கும் விளங்குமா? தாத்தா!

தாத்தா: நல்ல தமிழறிவு உள்ளவர்களுக்குதான் விளங்கும். ஆனால் பாடலை ஒருவர் வாசிக்க இன்னுமொருவர் பாடலின் கருத்தைச் சொல்வார். பிரசங்கம் எல்லோருக்கும் விளங்கும். கேட்கவும் அதிகம் பேர் வருவார்கள்.

கண்ணன்: சிறுவர்களும் வருவார்களா?

தாத்தா: சிறுவர்கள் தொடங்கிப் பெரியவர்கள்வரை எல்லோரும் வருவார்கள். நான் சிறுவனாயிருக்கும்போது பலதடவை கேட்டிருக்கிறேன் கண்ணா! கிருபானந்த வாரியாரின் பிரசங்கம் மிக நன்றாக இருக்கும். எல்லோரும் விரும்பிக் கேட்பார்கள். மணி அய்யர், தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் இன்னும் பலர் அந்தக் காலத்தில் கோயில்களில் திருவிழா நடக்கும் காலங்களில் பிரசங்கம் செய்வார்கள்.

கண்ணன்: அப்போ புத்தகம் வாசிக்காமலே பல புராணக் கதைகளைத் தெரிந்து கொள்ளலாம். இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம். கண்ணா! புராணக் கதைகள் மட்டுமல்ல நாயன்மார் சரித்திரம், சைவசமயம் சம்பந்தமான பல விடயங்களையும் மக்கள் இந்த பிரசங்கங்கள் மூலமாக அறிந்து கொள்வார்கள். அதனால் அதிகம் படிக்காதவர்கள் கூட

நிரம்பிய சமய அறிவுடையவர்களாக இருந்தனர்.

**கண்ணன்:** திருக்குறளில் “கேள்வி” என்னும் அதிகாரத்தில் கல்வி கற்காவிட்டாலும் கற்றவர்கள் சொல்வதைக் கேட்பதால் நல்ல அறிவைப் பெறலாம் என்று தமிழ்ப்பள்ளியில் நான் படித்திருக்கிறேன் தாத்தா!

**தாத்தா:** அப்படியா? நல்லது. உனக்கு தெரிந்த குறள் ஒன்று சொல்பார்ப்போம்!

**கண்ணன்:** சரி கேளுங்கள் தாத்தா! சொல்கிறேன்.
“கற்றில னாயினும் கேட்க அ்.தொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை”.

**தாத்தா:** சரியாகவே சொல்லியிருக்கிறாய். இதன் கருத்துத் தெரியுமோ? கண்ணா!

**கண்ணா:** இல்லைத் தாத்தா! நீங்கள் வழக்கம்போல எனக்கு விளங்குகிறமாதிரி சொல்லுங்கோ?

**தாத்தா:** சரியடா கண்ணா! உனக்குத் திருக்குறளைப்பற்றி இவ்வளவு தெரிந்திருக்றதே என்று எனக்கு நல்ல சந்தோஷமாக இருக்கிறது. ஒருவர் எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை, அறிவு மிகுந்த பெரியோர் சொல்லும் நல்ல விடயங்களைக் கேட்டு அறிந்து கொண்டாலே போதும். அந்த அறிவு சிலநேரம் என்ன செய்வது என்று தெரியாது மனம் தடுமாறும்போது தகுந்த வழிகாட்டும்.

**கண்ணன்:** அது எப்படி தாத்தா?

**தாத்தா:** பெற்றோர்களோ, ஆசிரியர்களோ பிள்ளைகளுக்கு எதை எப்படிச் செய்தால் நல்லது என்று அறிவுரை கூறுவார்கள். அதைக் கவனமாகக் கேட்டு மனதில் வைத்திருந்தால் பிள்ளைகளுக்கு எப்போதாவது அது உதவும். அதேபோலப் பெரியவர்களுக்கும் பெரியோரின் அறிவுரைகள் எப்போதும் உதவக்கூடியதாய் இருக்கும்.

**கண்ணன்:** எனக்கு இப்போது நன்றாகவே விளங்கிவிட்டது தாத்தா. எனக்கு இன்னுமொரு கேள்வி மனதில் வருகிறது. கேட்கலாமோ?

**தாத்தா:** கேளடா கண்ணா! உனது கேள்விக்குப் பதில் சொல்வதைவிட வேறு எனக்கென்ன சந்தோஷம் இருக்கு! சொல்லு! பார்ப்பம்.

**கண்ணன்:** இல்லைத் தாத்தா, வயதுபோன உங்களை அதிகம் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்யக்கூடாது என்று அப்பா சொல்லியருக்கிறார்.

**தாத்தா:** ஓ! அப்படி சொல்லியிருக்கிறாரா? அதெல்லாம் இல்லையடா கண்ணா! வயது போன நேரம் சுறுசுறுப்பாக வேலைதான் செய்ய முடியாது. உன்னைத் தூக்க முடியாது. உன்னோடு ஓடியாடி விளையாட முடியாது. நீ இப்படி கேள்வி கேட்பதால் எனது மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும். மூளை நன்றாக

வேலை செய்தால் நீண்டகாலம் சுகமாக சீவிக்கலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

கண்ணன்: அப்போ நான் உங்களுக்கு நல்லதுதான் செய்கிறேன். தொந்தரவு செய்ய வில்லை. என்ன தாத்தா!

தாத்தா: நிச்சயமாகக் கண்ணா! நீ இதை அப்பாவுக்குச் சொல். இப்போ நீ கேட்க நினைத்ததைக் கேள்?

கண்ணன்: கோயில்களில் சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன் இவ்வாறு பலவிதமாக கடவுளரின் உருவச் சின்னங்கள் இருக்கின்றனவே! இவையெல்லாவற்றையும் இவை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று யார் கண்டுபிடித்தார்கள் தாத்தா?

தாத்தா: இது ஒரு நல்ல கேள்வி. இப்படி ஒரு கேள்வி நீ கேட்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையடா கண்ணா!

கண்ணா: ஏதோ என் மூளையில் இப்படியொரு கேள்வி தோன்றியது. அதுதான் கேட்டேன்.

தாத்தா: வேதங்களில் சொல்லப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்றபடி கோயில்கள், சிற்பங்கள், கடவுளரின் உருவச்சிலைகள் உருவாக்கப்படும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். கொஞ்சநாளைக்கு முதல் வேறுவிதமான கருத்தை ஒரு நாடகக்கலைஞரின் கட்டுரையில் வாசித்தேன்.

கண்ணன்: அது என்ன புதுவிதமான கருத்து. சொல்லுங்கோ தாத்தா?

தாத்தா: அடியார்களுக்கு இறைவன் காட்சி கொடுத்தபோது அவர்கள் அதனை (தாங்கள் கண்ட காட்சிகளை) பாடல்களாகப் பாடியுள்ளனர். அதனைக்கொண்டே சிற்பிகள் கடவுளரின் சிலைகளைக் கல்லிலோ செம்பிலோ செய்கிறார்கள். என்று அந்தக் கலைஞர் குறிப்பிடுகின்றார்.
"தோடுடைய செவியன் விடையேறியோர்.." என்று ஆரம்பிக்கும் தேவாரத்தை ஒருமுறை நினைத்துப் பார் கண்ணா!

கண்ணன்: தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்.."
ஆமாம் தாத்தா! சிவன் எப்படி இருக்கிறார் என்பதை இவ்வரிகள் வெகு அழகாகக் கூறுகின்றன.

தாத்தா: இப்படி பல தேவார திருவாசகங்கள் உள்ளன. கண்ணா! சரி. சரி வீட்டிற்கு வந்துவிட்டோம். அழைப்பு மணியை அடி.!


**(கண்ணனும் தாத்தாவும் கோயிலிலிருந்து வீட்டிற்கு வந்து சேர்கின்றனர். கதவைத் திறக்க பாட்டி வடை சுடுகிறா என்று வாசனைமூலம் அறியமுடிகிறது. குளிருக்கால் நடந்து வந்த தாத்தாவிற்கும் கண்ணனுக்கும் பாட்டி செய்து வைத்த வடையும் தேனீரும் தேவாமிர்தமாக இருந்தன. ஆனந்தமாக சுவைத்து சாப்பிட ஆரம்பித்தனர்.)**


# Hinduism in search of answers...

(Previously...)
[
**How can Atman achieve Moksha (or Mukti)?**
(A) Sariyai Path (B) Kiriyai Path (C) Yoga Path
1. Yama 2. Niyama 3. Asana...]

**3. Asana (Yogic postures)**

Asana is one way in which a person can experience the unity of body and mind. Asana is defined as that which is comfortable and easy, as well as firm. Asana is a dynamic position, in which the practitioner is perfectly poised between activity and nonactivity.
Yoga Sutras say that when we master asanas we are able to handle opposites. It helps us to get used to different situations and be able to cope with different demands. A posture or asana can also be used for rejuvenating specific organs and glands as well as the spine.


Shoulderstand


Cobra Posture


Another advantage of asana is that it is direct. It can temporarily bring peace and quiet the mind. This quieting encourages the balancing of the mental functions of the individual, since it allows the intuitive aspects of the mind to have free play. This soothing effect on the brain has been verified by EEG data of brain during meditation. It has great healing implications. Many of the asanas have animal names, such as the fish posture and the cobra posture. This is because yogis devised their asanas partly by observing how animal instincts work in the wild.

Asanas are also based on a sound knowledge of human anatomy and physiology. Yogis knew that placing the body in certain positions would stimulate specific nerves, organs and glands. For example, the shoulder-stand posture causes the blood to be directed by gravity to the thyroid gland, and the tucking in of the chin causes a gently squeezing action on the gland. These two actions have a profound effect on the thyroid gland.

## Some examples of Asanas:




## Sun Worship:



## 4. Pranayama

Pranayama is the measuring, control, and directing of the breath. Pranayama or breathing technique is very important in yoga. It goes hand in hand with the asana or pose. In the Yoga Sutras, the practices of pranayama and asana are considered to be the highest form of purification and self discipline for the mind and the body, respectively. This allows a more healthful state to be experienced and allows the mind to become more calm.

If we want to practice pranayama, we have to be able to sit comfortably erect for a period of time. Asanas help us to focus on the breath rather than the body during pranayama practice. If we can sit comfortably and effortlessly erect, there is nothing to distract us from our concentration on the breath. Asana is thus both a preparation for meditation.



Patanjali defines pranayama as "the regulation of the incoming and outgoing flow of breath with retention." It is to be practiced only after perfection in asana is attained.

The word pranayama consists of two parts: prana and ayama. Ayama means to draw out, stretch or expand. Prana is energy, the self-energizing force which embraces the body. Pranayama means 'to extend the life force'.

There are several types of Pranayamas. The following are some of them:

Bhastrika Pranayam, Kapalbhati Pranayam, Anulom Vilom Pranayam, Bahya Pranayam, Bhramari Pranayam. These should be learned from a Guru or qualified practitioner.



Alternate Nostril Breathing


## 5. Pratyahara

This involves withdrawal of sensory inputs into our physical being. Sensory inputs come from our five senses. Without pratyahara, these will hinder the concentration of the mind, in Dharana, the next stage of Yoga. It is the conscious withdrawal of energy from the senses.

Control of our senses requires mastery over the flow of prana, as that is what drives the senses. To stop the scattering of valuable vital energy of the body or prana, we first need to seek control over its flow, and harmonize it through Pranayama.



The term pratyahara is composed of two Sanskrit words, prati and ahara. Ahara means "food," or "anything we take into ourselves from the outside." Prati is a preposition meaning "against" or "away" or "replace". Pratyahara means literally "redirecting the senses from external focus to internal focus." It is compared to a turtle withdrawing its limbs into its shell — the turtle's shell is the mind and the senses are the limbs. The term is usually translated as "withdrawal from the senses," but much more is implied.




For meditation, it is necessary to practice Pratyahara, or Withdrawal of the Senses from the many "objects." This does not mean just closing off the *physical* instruments such as closing the eyes or stilling the muscles, though the process may start there. It also means withdrawing the *mental* Senses or Indriyas from those "objects."

Pratyahara also means withdrawing the Senses (Indriyas) from the *inner*, mental "objects" of our personal world, as well as the "objects" of the subtler realms. After Pratyahara, one can then focus attention, following that further inward through the stages of Concentration (Dharana), Meditation (Dhyana), and Absorption (Samadhi).

SwamiJ.com


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



*First Sri Lankan Jewellery shop in U.K.*

WESTERN
JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
PHONE : 020 8767 3445

SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
PHONE : 020 8672 1900

WESTERN
JEWELLERS & TEXTILES



5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
PHONE : 020 8903 0909

OPENING HOURS
Monday to Saturday
10.00am - 6.30pm
Sunday 11.00am - 5.30pm


இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 15-01-2016 அன்று வெளியிடப்படுகிறது.